முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 15-6-56 | வெள்ளி | ஒலி 10

★ குறளோவியம் ★

— கருணா —



நாணேற்றி வில் வளைத்து விட்டால் கானுலாவும் புலியென்ன; வானுலாவும் புறாவென்ன; ஊனருந்தும் வேடனுக்கு விருந்தாகும். சரமாரி பொழிகின்ற சமர்க்களத்து தீரன்-புறம் பாடிப் புகழ் சூட்டும் போர்க்களத்து வீரன்-மறமாதர் பெற்றெடுத்த திருவாழும் திண்தோளன்-வனப்பு மிகு மங்கையரின் வளைந்திருக்கும் புருவம் போல் வில் வளைத்து விரோதிகளின் விலாப்புறத்தில் 'ரத்தவீழ்ச்சி' தனைக்காட்டிடுவான்.

அவனைக் கண்டான் அவனி புகழ் குறள் தந்த கோமான்; தமிழ்ச் செல்வம் குவித்து வைத்த சீமான். மான் கொன்று-தேன் குடிக்கும் வெங்கரடி வீழ்த்தி – களத்தினிலே மனிதர் தலை தனைத் தென்னங் குலைபோலச் சாய்த்து நிற்கும் மலைத்தோளான் தன்னை வில்லேருழவன் என்றழைத்தான்; களத்தினிலே வில்லை ஏராகக்கொண்டு வெற்றி விளைப்போன் என்ற பொருளில்! "தோள்தான் மலை-வீரருக்கு! இவனுக்கோ, தோகைபோல் விரிந்திருக்கும் மனமும் மலைபோல உரம் கொண்டே விளங்குகிற காட்சி கண்டேன்" என்றெழுதுகிறான் நம்மருமைத் தமிழ் நாட்டின் முதல்வன்! முப்பால் வகுத்த மூத்தோன்!

வில்லேருழவர் உயிர் குடிப்பர்-வள்ளுவன் உணர்ந்தான். ஆயினும் அஞ்சவில்லை! இன்னொரு உழவனைக் கண்டான். அவன்தான மலைமனம் கொண்ட சொல்லேருழவன். அந்த உழவன், வில்லேருழவனிலும் மேம்பட்டோன் எனச் சொன்னான்.

"வில்லேருழவர் பகை கொளினும் கொள்ளற்க
சொல்லேருழவர் பகை!"

அந்தக் காலத்தில செந்தமிழ் நாவலன் செதுக்கி வைத்த குறள் சிற்பம்!

இன்று: வில்லேருழவரைக் காண்கின்றோம்-வேட்டையாடுகிறார் மக்களை, என நாடு கூறுகிறது! மராட்டிய மண்ணிலே ரத்தச் சேறு! நாக நாட்டிலே வெறி வேட்டை! அந்த வடநாட்டு வில்லேருழவரின் பகை கொளினும் கொள்க! அது ஆபத்தில்லை! குறள் கூறுகிறது இப்படி!

சொல்லேருழவர் பகை கொள்ளற்க! கட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் கலை தெரிந்த நமது தலைவர், குறள் இலக்கணம் கூறும் சொல்லேருழவர்' அந்தச் சொல்லேருழவரின பகை கொள்ளற்க; பகை கொண்டால் அவர்களை எதிர்காலம் நகை முழக்கிக் கேலி செய்யும்! தூய்மையற்றவரே! துரோகிகளே!-எனத் தூற்றும்!

விடுதலைப் படை வீழ்த்த வில்லேருழவர்-விடுதலைப் படை சேர்க்க சொல்லேருழவர்- இவர்களில் வள்ளுவன் யார் பகையைக் கொள்ள வேண்டாமென எச்சரிக்கிறான் என்பதை உணர்வீராக!



அன்புள்ள தம்பி,

தோழர் என். எஸ். இளங்கோவும், நீயும் தஞ்சை மாவட்டத்தில் தக்க ஏற்பாடுகள் செய்து வருவது கண்டு நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். திருவையாறு நிகழ்ச்சியின் போது கருப்புக் கொடி காட்டுவதை விட, அதற்காக ஆச்சாரியார் செல்கிறபோது, வழியில் பள்ளி யக்கிரகாரத்திலோ அல்லது வேறு தக்க இடத்திலோ கருப்புக் கொடி காட்டுவதுதான சிறந்த முறை.

ஆர்வம் போதுமான அளவு கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு—கட்டுப்பாடாகவும் கண்யம் கெடாத முறையிலும் காரியத்தை நடத்த வேண்டுகிறேன்.

தஞ்சை மாவட்டம்—அடித்து அடித்து பழகிப்போன போலீஸ் படை இருக்கும் இடம். தூண்டிவிடும் பார்ப்பனத் தலைவர்கள் வாழும் இடம். காங்கிரசிடம் புதிய மோகம் கொண்டுள்ள மிட்டா மிராசுகள் உள்ள மாவட்டம். எனவே அங்கு அடக்கு முறை பல உருவில் வெளிப்படக் கூடும். நிலைமையை நன்கு அறிந்து நடந்து கொள்ள வேண்டுகிறேன். போலீஸ் 'பரே'டின் போதும் விழாப் பந்தலுக்கு அருகேயும் கருப்புக் கொடி வேண்டாம்.

திரும்பிப்போ—என்பது தவிர வேறு ஆபாசக் கூச்சலிட யாரையும் அனுமதிக்காதீர்கள்.

பலாத்காரம் துளியும் தலைகாட்டக்கூடாது. தோழர்களிடம் இதைக் கண்டிப்பாகக் கூறவும்.

முன் கூட்டியே கைது செய்தால் பரவாயில்லை மற்றவர்கள் காரியத்தை நடத்தட்டும்.

பொறுப்பான காரியம்-இதைத் தக்க விதத்திலே நடத்தித் தருவதற்கு ஏற்ற ஆற்றலும் பண்பும் உள்ளவர்கள் என தம்பிமார்கள் என்ற பூரிப்பும் நம்பிக்கையும் எனக்கு நிரம்ப நிரம்ப !

உடனுக்குடன் தகவல் கொடு ! 26-ந் தேதி நான் திருச்சியில் இருக்கிறேன். தகவல், அங்கும் சென்னை 'மாலைமணி'க்கும் தரவும்.

அன்பன்,

அண்ணாதுரை

★

என்ன பொன்முடி! திடுக்கிட்டு விட்டாயா ? தோழன் என முறை சொல்லி அழைப்பவன் திடீரென தம்பி என அழைத்து விட்டானே யென்று கடிதத்தின் ஆரம்பத்தைக் கண்டதும் ஆச்சரியப்பட்டு விட்டாயா ! நான் உனக்கு எழுதியதல்ல; **நம் அண்ணா எனக்கு எழுதிய கடிதங்களிலே ஒன்று மேலே யிருப்பது !** 1951-ம் ஆண்டு ஜனவரி 26-ம் நாள் ஆச்சாரியார் அவர்கள் திருவையாறு தியாகய்யர் திருவிழாவுக்கு வருகிறார். அப்போது நம் கழகத் தீர்மானத்தின்படி அவருக்குக் கருப்புக் கொடி காட்ட வேண்டும். "தஞ்சையிலே கருப்புக் கொடி நிகழ்ச்சி வெற்றியடைய முடியாது! காரணம் அந்த மாவட்டத்திலே தி. மு. கழகத்திற்கு செல்வாக்கு இல்லை" யென்று 'புறங்கூறுவோர்' பேசித் திரிந்த நேரம் அது ! மாவட்டத்திலே யிருந்த முக்யஸ்தர்கள் கூட "முடியுமா?" என்று யோசித்த வேளை ! நான் ஓடினேன், அதிராம் பட்டணத்திற்கு! அன்புத் தோழர் இளங்கோவை அழைத்துக் கொண்டு, குடந்தை நீலமேகம் அவர்களை சந்தித்து, கருப்புக்கொடி ஏற்பாட்டை நானும் இளங்கோவும் முன்னின்று நடத்துவது என்ற முடிவுக்கு அவரிடம் அனுமதி பெற்றோம் அப்போது அவர் மாவட்டச் செயலாளர். கழகத்திற்கு மாவட்டத்தில் பலமில்லை எனகிறார்களே; அதையும் பார்த்து விடுவோமென்று இளங்கோவும் நானும் தஞ்சைத் தரணியில் இருபது நாட்கள் சுற்றுப் பயணம் குறித்தோம். இருபது நாட்களில் ஏறத்தாழ நாற்பது கூட்டங்கள் ! இரவு இரண்டு மணிக்குக்கூட சில கிராமங்களில் பொதுக் கூட்டம் ஆரம்பமாகும். மதுக்கூர் என்ற ஊரில் கூட்டம் முடிவதற்கு விடியற்காலை நாலரை மணி ஆயிற்று. அதற்கு



மேல் இரவு உணவைச் சாப்பிட்டோம். அப்போது எங்களோடு நாடக அமைப்பாளரும், திராவிடர் கழக நண்பருமான எம். எஸ். முத்துகிருஷ்ணன் வந்திருந்தார். 'பராசக்தி' பட வசனம் எழுதி வாங்குவதற்காக அவர் என்னோடு சுற்றிக் கொண்டிருக்கிறார். அந்த சுற்றுப் பயணம் வெற்றிப் பயணமாகவே இருந்தது ஜனவரி 26ல் திருவையாறு வந்த ஆச்சாரியார் கருங்கொடிக் கடலிலே நீந்தித்தான் செல்ல வேண்டியிருந்தது. அவ்வளவு மகத்தான வெற்றி ! தஞ்சை மாவட்டம் தனது பழம் பெருமையை கம்பீரத்தோடு பாடிக் காட்டியது ! திருவையாறு விழாக் காண வந்தோர் எல்லாம் தி. மு. கழகத்தின் வலிவையும் பொலிவையும் உணர்ந்தனர்.

ஏனிப்போது இந்தப் பழைய கதையென்று கேட்பாய்; எதையோ சொல்ல வந்து எங்கேயோ போய் விட்டேன் !

அப்போது அண்ணா எழுதிய கடிதத்தின் வாசகங்களைப் பார்த்தாயா ? இன்று காலையில் பழைய 'பைல்'களை புரட்டிக் கொண்டிருந்தேன்; கல்லக்குடி போராட்டத்தினபோது ஒரு நண்பர் சிறை செல்வதற்கு முன் ஒருவருக்கு எழுதிய முக்கியமான தொரு கடிதத்தைத் தேடிக் கொண்டிருந்தேன். அதைத் தேடிப் பிடித்தபோது அண்ணாவின கடிதமும் கிடைத்தது. அகமும் முகமும் மலர்ந்தது எனக்கு ! கண்களிலே ஒத்திக் கொண்டேன் ! களத்திலே நிற்கும் எங்களுக்கு தலைவன் தந்த உற்சாகக் கவிதையன்றோ அது !

திரும்பத் திரும்பப் படித்தேன். எப்போதுமே என்னிடம் பழைய கடிதங்களின் தொகுப்பு, ஒன்று கூடத் தவறாமல் இருக்கும், கடிதம் எழுதியவர்களிலே பலர் நலம் கேட்டு எழுதியவர்கள்! சிலர் பணம் கேட்டு எழுதியவர்கள் ! சிலர், நான் முன்பு 'தர வேண்டிய கடன் கேட்டு எழுதியவர்கள் ! சிக்கிக் கொண்டிருப்பவர்கள் சிலர் ! நாடறியாது நமது கடிதங்களையென எண்ணி நாடகம் போட்டு, நாடகத்தை எழுதியவரையே தாக்கிப் பேசும் நன்றி கெட்டவர்கள் சிலர்! இப்படிப்பட்ட காகிதச் சோலையிலே தான் நம் தலைவன் தீட்டிய பொனனோலை-போர் விளக்க முடங்கல்—காணக் கிடைத்தது எனக்கு !

தஞ்சை மாவட்டம் பற்றி அவர் தந்துள்ள குறிப்புகளைப் படித்தாயா? யார் யார் எப்படிப்பட்டவர்கள் என்பதை நிறை போட்டு வைத்திருக்கும் அரசியல் அறிஞரல்லவா அவர்!

> "தஞ்சை மாவட்டம்-அடித்து அடித்து பழகிப் போன போலீஸ் படை இருக்கும் இடம் !"

இந்த வாசகம் 1951-ல் எழுதப்பட்டது ! இப்போதும் தஞ்சை மாவட்டத்திற்குப் பொருந்துகிற நிலைமையிலேதான் இருக்கிறது ! இந்த வாரந்தானே பத்திரிகையில் பார்த்தோம்; திருவாரூரில் நமது கழகச் செயலாளர் விசயராகவன் அவர்களை கைது செய்தார்கள் என்ற செய்தியை ! விசயராகவனை உனக்குத் தெரியுமோ என்னவோ; அவரைப்போல பரம சாது யாரையும் பார்க்க முடியாது! டாக்டர் அவர்—ஊசியைக் கூட வலிக்காமல்தான் குத்துவார்; நோயாளிககு பயந்து கொண்டு! நாகையிலே நல்ல குடும்பத்திலே பிறந்த பிள்ளை ! நாகரீகமாக வளர்க்கப்பட்டவர் ! அவர் ஒரு நாடகத்திலே குழப்பம் விளைவித்தாராம் — வழக்கு தொடரப்பட்டிருக்கிறது அவர்மீது ! 'தியாகி' என்ற பெயருள்ள நாடகம். அப்படியொன்று நான் எழுதியதாகவே எனக்குத் தெரியவில்லை; என் பெயரால் என் அனுமதியின்றி விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே கலாம் விளைத்ததாக நமது கழகச் செயலாளர் கைதாகியிருக்கிறார். ஏனோ தெரியவில்லை; தி. மு. கழகமென்றாலே திருவாரூர் போலீஸ் அதிகாரிகளுக்குத் தீயாகச் சுடுகிறது ! காங்கிரஸ் தரும் மயக்கமோ—அல்லது கடமையை நிறைவேற்றுவதில் தயக்கமோ-யாமறியோம்!

> "காங்கிரசிடம் புதிய மோகம் கொண்டுள்ள மிட்டா-மிராசுகள் உள்ள மாவட்டம்-எனவே, அங்கு அடக்குமுறை பல உருவில் வெளிப்படக் கூடும்."

என்றைக்கோ—எப்போதோ—ஏதற்காகவோ அண்ணா எழுதிய வாசகம் இது ! இன்றைக்கும் காண முடிகிறது; நமது தோழர்கள்மீது பாய்கிற அடக்கு முறைக் கணைகளை !

தேர்தல் நெருங்க நெருங்க இதுபோன்ற கணைகள் ஏராளமாகத் தொடுக்கப்படும். நமது தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் மீது கொள்ளை வழக்கு தொடரப் பட்டிருக்கிறது. கல்லக்குறிச்சி, தம்மம்பட்டி போன்ற இடங்களில் கழகத்

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

சென்னை 15--6--56 வெள்ளி

தமிழர் போராட்டம்!

அன்னைத் தமிழை ஆழக் குழி தோண்டிப் புதைக்க சிங்களவர் செய்து வரும் சதியை எதிர்த்து சங்கநாதம் முழக்கி விட்டார்கள், ஈழம் வாழ் இளந்தமிழர்!

மொழிகள் குல முதல்வி; கலைகள் பல கொண்டோள்; மலை அழியினும் தன் நிலை குலையாச் சீரிளமைத் திறம்படைத்தோள்; ஆரியம் வென்றவள்; மலரினும் மங்கையினும் மென்சுகம் தருவோள்—அவளைத்தான் அழித்துவிட அதிர்வேட்டுகளைக் கிளப்பியிருக்கிறார்கள், முற்றிய கதிர் சாய்வதைப் போல, தலைக் கனத்தால் தமிழினத்தை தவிடு பொடி செய்து விடக் கங்கணம் கட்டியிருக்கும் மொழி வெறியாளர்கள்!

இத்தரை மீதில் ஒப்பாரும் மிக்காரும் அற்ற முத்தமிழ்ச் செல்வியே! இங்குதான் இந்தியெனும் பெண்ணாள்; மந்தி--காச முகவதியாள்; உன்னை சாகசத்தால் சாய்த்து விட நினைத்து சழக்கரின் ஆணையை நாடுகிறாள் என்றால்—நீ பாலூட்டிச் சீராட்டி வளர்த்த ஈழத்திலுமா உனக்கு எதிர்ப்பு? அரும்பெறற் பாவாய்! அன்றொரு நாள் விஜயன் என்பானை வென்று, அவனோடு ஆயிரமாயிரவரைக் கைது செய்து விருது பெற்ற ராஜேந்திரனை மகவாகப் பெற்றவளே! நேற்று உன் புதல்வன் இலங்கையைத் தன்காலடியில் வைத்து உனக்கு மகுடம் புனைவித்தான். இன்று அங்கிருந்தா உன்னைத் துரத்திவிட நினைக்கிறார்கள், தூய்மை எனும் ஒரு பதத்தை அரசியல் அகராதியிலிருந்து துரத்திவிட்டோர்! இப்படியெல்லாம் கண்ணீர் விட்டுக் கதற வேண்டியவர்களாகிறோம், காலிகளுக்கும் கூலிப் பட்டாளத்திற்கும் முழுச் சுதந்திரம் வழங்கி, முழு மதியாம் தமிழை மறைத்து விட மனப்பால் குடித்திருக்கும் முகிற் கூட்டங்களை நினைக்கும்போது!

இத்திங்கள் **5**-ம் தேதி செவ்வாயன்று மலர்வாய் திறந்து, தமிழ்—என்று சொன்னவர்களின் வாயடைக்க சிங்களம் ஒன்றையே ஆட்சி மொழியாக்கி விட்டார்கள்; பண்டார நாயகாவின் தலைமையிலே இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் கட்சியினர்.

இந்த ஓரவஞ்சக நிலைக்கு எதிர்ப்பு காட்டு முகத்தான் அமைதி வழியிற் சென்று, பாராளுமன்றத்தின் முன்னே சத்தியாக்கிரகம் செய்த தமிழ்த் தலைவர்கள் அத்தனை பேரும் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள், சிங்கள வெறியர்களால்!

அதைத் தொடர்ந்து தமிழர்வாழ் பகுதிகளும், அவர்கள் நடத்திவரும் பண்டகசாலைகளும் பண்டார நாயகாவின் ஆட்சியிலே தீக்கிரையாக்கப்பட்டன.

தமிழ்த் தலைவர்கள் மட்டுமின்றி, தமிழுக்கு சம மதிப்பு தருவதை ஆதரிக்கும் இடதுசாரித் தலைவர்களும் காலிகளின் தாக்குதலுக்குப் பலியாகியிருக்கின்றனர்.

இலங்கையின் வாழ்வில்-அதன் உயர்வு தாழ்வில் சிங்களத்துக்கு உள்ள பங்கை செலுத்திட அருமைத் தமிழும் உரிமை பெற்றிருக்கும் போது அதைக் குப்பை மேட்டிற்கு உதைத்துத் தள்ள அங்குள்ளோர் ஏன் முயல வேண்டும்?

தபால் தலைகளில் தனித் தமிழ்ச் சொற்கள் அங்கே மணியெனத் திகழ்வதைப் பார்க்கிறோம்; சென்னை, திருச்சி வானொலி நிலையங்களில் 'நமஸ்காரம்' என்னும் காரம் மிகு சொல் நம் காதுகளைக் குடையும் போது, அங்கிருந்து வரும் ஒலி பரப்பில் 'வணக்கம்' எனும் வண்டமிழோசை நம் சிந்தை, அணு ஒவ்வொன்றையும் சிலிர்த்திட வைப்பதை உணர்கிறோம்!

— இவ்வளவு நாட்கள் தமிழிடம் காட்டிய ஆதரவுக் கரத்தை இப்போது ஏன் சிங்களவர் வெடுக்கென இழுத்து, இழுக்கு தேடிக்கொள்கின்றனர்?

— இந்த வினைக்கள் வேலெனப் பாய்ந்து, தமிழரெனப் பிறந்தோர் அத்தனை பேர் உள்ளங்களையும் குடைகிறது.

யார் காட்டிய பாதை? எவர் சொல்லித் தந்த யோசனை? ஏனிப்படி ஒரு மொழி ஆதிக்க உணர்ச்சிக்கு சிங்களவர் அனைத்தும் பலியாகி நிற்கின்றனர்?—இந்தக் கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொண்டு பதில் சொல்லிப் பார்ப்போம்!

விழியினும் மேலதாம் மொழியைச் சிதைத்து, ஏகாதிபத்தியத் தேர் ஓட வழி அமைக்கும் கொள்கையின் பிறப்பிடமே இந்த பாரதம்தான்!

இட்லரிச வழிகளால் இந்திக்குச் சிம்மாசனம் தேடி, இதர மொழிகளைச் சந்தியில் நிறுத்த வைக்கும் திட்டம் நம்முடைய தேசியத் தோழர்களையே விளை நிலமாகக் கொண்டு முளைத்தெழுந்த முழு மூடக்கொள்கையாகும்!

அந்த வகையில் பாரதம் காட்டிய வழியிலே இன்று ஈழம் பீடு நடை போடுகிறது!

இது குறித்து 'சுதேசமித்திரன்' ஜூன் **6**-ம் தேதியன்று தனது தலையங்கத்தில் கூறுவதைப் பாருங்கள்:

> "இலங்கை, ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகளின் உதாரணத்தைப் பின்பற்றுவதுதான் பொருத்தம். ஸ்விட்சர்லாந்தில் மூன்று பாஷைகள் ராஜாங்க பாஷைகளாக இருக்கின்றன. உண்மையில் அது இலங்கையைவிட மிகச் சிறிது. இலங்கையில் இது வரை போல்-சிங்களம், தமிழ் இரண்டும் ராஜாங்க பாஷைகளாக இருப்பதில் தவறில்லை!..."

—மித்திரனின் படப்பிடிப்பு இது!

சின்னஞ்சிறிய ஸ்விட்சர்லாந்தில் மூன்று மொழிகள் ஆட்சி மொழியாக இருக்கிறதாம்!

அதே முறையை இலங்கையும் பின்பற்ற வேண்டுமாம்!

ஆனால் பாரதம் எனும் இந்தப் பரந்த நாடு மொழிவகையில் ஸ்விட்சர்லாந்து உணர்த்தும் சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாதாம்! — கூறுகிறது 'மித்திரன்' ஏடு!

"காலரா வராமலிருக்க தடுப்பு ஊசி குத்திக் கொள்"—என்று விளக்கம் கூறும் டாக்டர், அவனுக்குப் பின்னால் நின்று கொண்டிருக்கும் இன்னொருவனைப் பார்த்து, "உனக்கு தடுப்பு ஊசி ஒத்து வராதப்பா; நீ உடன் சென்று மாரியம்மனுக்கு காப்பு கட்டு; காவு கொடு; காவடி எடு!" என்று இன்முகம் காட்டி இதோபதேசம் செய்தால் அந்த டாக்டரின் 'மருத்துவ நூல் அறிவையே' சந்தேகிக்கத்தான் செய்வர், அந்தக் காட்சியைக்காண நேர்ந்தோர்!

இலங்கையிலே பரவியிருக்கும் 'ஏகமொழிப் பித்து' என்னும் நோய்க்கு 'ஸ்விட்சர்லாந்து மருந்தை' விழுங்கச்சொல்லும் மித்திரனார், அதே நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த உபகண்டத்திற்கு அந்த மருந்து ஒவ்வாது என்று உபதேசம் செய்வது கதையில் வரும் டாக்டரின் 'விஞ்ஞானத் தெளிவை'த்தான் சுட்டிக் காட்டுகிறது.

பிராந்திய மொழிகளின் விலாவெலும்புகளை ஒடித்து விருந்து வைக்கிறார்கள்; இந்தி என்னும் திமிங்கிலம் அதைத் தின்று கொழுப்பதைக் கண்டுகளிக்கிறார்கள்—இங்குள்ள தேசியப் புலிகள்!

—மொழித் துறையில் இவர்கள் காட்டிய இதே காட்டுமிராண்டிக் கொள்கையைத்தான் நாங்களும் கடைப்பிடிக்கிறோம்—என்று களிப்போடு கூறுகிறது, இலங்கை!

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் பண்டிதர் பாதையில் நடக்கப் போவதாகக் கூறும் பண்டாரநாயகா, மொழிக் கொள்கையிலும் அவர் அடிச்சுவட்டையே பின்பற்றுகிறார் போலும்!

அடுத்த வீட்டுக்காரன் அந்தஸ்தில் உயர்ந்தவன்; அவனை உதாரணமாகக் கொண்டால் நாமும் உயரலாம்—என்று கூறிக்கொண்டு, அவன் சாக்கடையில் ஜலக்கிரீடை செய்தால் நாமும் அப்படிச் செய்வதில் தவறில்லை—என்று கருதுவது கடைந்தெடுத்த அறிவீனம்!

—இடதுசாரிக் கட்சியில் இருப்பதால் பெருமைப்படும் பண்டாரநாயகா, பண்டிதர் செய்யும் தவறையே திரும்பச் செய்வது உண்மையிலேயே வருந்த வேண்டியதும், கண்டிக்க வேண்டியதுமான செய்கையாகும்!

இந்த ஆட்சிபீடம் இலங்கைவாழ் முப்பது லட்சம் தமிழர்களின் நல்வாழ்விலே அக்கரை கொண்டிருப்பது உண்மையாக இருந்தால், அது உடனடியாகச் செய்யவேண்டிய காரியமொன்று இருக்கிறது.

"எங்கள் நாட்டில் ஒரே மொழிப் பித்தை ஒழித்துவிட்டோம்; இந்திக்கு முதலிடம் என்னும் சொத்தை வாதத்தை திரும்பப் பெற்றுக் கொண்டோம். இலங்கை வாழ்வோரே! நீங்களும் சிங்களத்துக்கே முதலிடம்—என்னும் ஏகாதிபத்தியக் கொள்கையைக் கைவிடுங்கள்"—என்று பண்டிதர் அறிவித்துவிட வேண்டும்.

அப்போதுதான் இலங்கையிலே ஏற்பட்டிருக்கும் இரத்தக் களரி அடங்கும்; அப்போதுதான் பாரதம் பாதை காட்டுகிறது — என்று மார் தட்டிக் கூறுகிறாரே பண்டிதர்; அந்தப் பேச்சிலும் பொருள் இருக்க முடியும் — செய்வாரா?

★ ○ ★

கலையுலகில் கருத்துப் புரட்சி!

கலை, சமூக முன்னேற்றத்தின் சாயல். ஒரு நாடு முன்னேற்றமடைந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ள பேருதவி புரிவது அந்த நாட்டில் வளர்ந்துள்ள கலை. மனித சிந்தனையின் இடைவிடாத சுழற்சியேதான் கலை. இது இப்படியிருந்தது என்பதை—இல்லை, இல்லை, இது இப்படியிருக்க வேண்டும் என்று செய்து காட்டுகிற ஒன்றைத்தான் நாம் கலை என்கிறோம். தொடர்பற்ற ஒன்றை தொடர்புபடுத்தி, அந்த இரண்டின் செயற்கையால் வேறோர் நூதனத்தைக் காண்கின்றோமே, அதைத்தான் கலை என்கிறோம்.

உதாரணமாக, வெற்றிலை பச்சை நிறம், பாக்கு காவி நிறம், சுண்ணும்பு வெள்ளை நிறம். இந்த மூன்றையும் கலக்கும்போது, மூன்றின் உண்மை நிறங்கள் மாறி சிவப்பு நிறமாகி விடுகிறது. அதைப் போலத்தான், பல பொருள்களின் கூட்டுறவால் வேறோர் தன்மையடைந்து, அது மனிதனுடைய அன்றாடத் தேவைகளாக ஆகிவிடுகின்றபோது அது கலை என்று பெயர் பெற்று விடுகிறது. சமையற் கலை, தையற் கலை முதற்கொண்டு, இன்று வரை வளர்ந்துள்ள விஞ்ஞானக் கலை வரை, மனிதன் தன் அறிவால் செய்த புரட்சிக்கு நாம் கொடுத்த புனிதமான பெயர்தான் கலை.

ஓய்வில்லை

வழக்குகளை விசாரிக்கிற நீதி மன்றங்களுக்குக்கூட சில நாட்கள் ஓய்வுண்டு. விசாரித்துத் தீர்ப்புக் கூறவேண்டிய வழக்குகள் ஏராளமாக இருந்தாலும், தட்ப வெட்ப நிலைகளை எண்ணி அவைகளை சிறிது காலம் மூடிவிடுகிறார்

"வேலைக்காரி" காளி உடைக்கப்பட்டாள்!

கள். ஆனால், சமூக மூளை எனும் நீதிமன்றம் தன் கண்முன் தோன்றும் எந்த வழக்கு (நிகழ்ச்சி)களையும் விசாரித்துத் தீர்ப்பு கூறவேண்டியிருக்கிறது. ஆகவேதான் சிந்தனை எனும் அலைகள் ஓயாது அடித்துக்கொண்டிருக்கின்றன.

கலை வளர...

கலை வளருவதற்கு மனிதர்கள் தான் பயன்பட்டார்கள் என்று சொல்ல முடியாமல், பூமியிலே புதைந்து கிடக்கும் பொருள்கள், தாவரங்கள், பறவைகள், காவிரி நீர் முதல் கடல் நீர் வரையிலும் எல்லாமே உதவி செய்திருக்கின்றன. கண்ணுக்குத் தெரியக்கூடிய பொருள்கள் மாத்திரமல்லாமல், கண்ணுக்குத் தெரியாத அணு, காற்று போன்றவையெல்லாம் மிக பயனுள்ளதும், ஆனால் அதே நேரத்தில் மிக பயங்கரமானதுமான விஞ்ஞானக் கலை என்கிற நுண் கலை தோன்ற உதவி புரிந்திருக்கின்றன.

குறிப்பாக இசைக் கலையை எடுத்துக்கொண்டால் மனிதர்கள் இசைக்கிறார்கள். வீணை இசைக்கப்படுகிறது. குயிலும் வானம்பாடியும் இசை பாடுகிறது. இங்கே கலையில் மனிதன் கண்ட புரட்சி ஒரு மரத்துண்டையும், சில நரம்புகளையும் சேர்த்து, அதை விரலால்

சிந்தனைச் சிற்பி **சிற்றரசு** செயலால் - எழுத்தால் - பேச்சால் - திராவிடரின் இதயத்தில் இடம் பெற்றவர். அழகிரியின் வாரிசு! அவரது மாநில மாநாட்டு சிறப்பு சொற்பொழிவின் சுருக்கம் தரப்படுகிறது; சுவையுங்கள்! [ஆ-ர்]

மீட்டி பேசச் செய்தான் என்பதுதான். எல்லோரும் மீட்டுகிற வீணை ஒரேமாதிரிதான் இருக்கிறது. ஆனால் மீட்டுகிறவர்களின் மனோ புரட்சிக்கு ஏற்ற வகையில் நரம்புகளைத் தடவி, நாதத்தைக் கிளப்பி கேட்போரை மதிமயங்கச் செய்கின்றார்கள்.

வீணை தனம்

குறிப்பாக, காஞ்சீபுரத்தில் தனம் அம்மையார் என்று ஒருவர் இருந்தார்கள். அந்த அம்மையார் வீணை வாசிப்பதில் மிக வல்லவராக இருந்தார்கள். அவருக்கு முன்பும், அவர் காலமான பின்பும் இது நாள் வரையிலும் யாரும் அந்த அம்மையாருக்கு ஈடாக வாசித்ததில்லை என்ற காரணத்தால், தனம் வாசிப்பது வீணை, மற்றவர்கள் வாசிப்பது வீணே; என்ற பழமொழியே உண்டாயிற்று. காரணம் என்ன? வீணையை வாசித்தார்கள் என்று சொல்வதற்குப் பதில் பேச வைத்தார்கள் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

ஆனால் இசை ஒன்றிலேயே குறிப்பிட்ட காலம்வரையில் நிம்மதியடைந்திருந்த மனிதன் அதில் கருத்தெங்கே என்று கேட்டான். "கலையில் கருத்தெதற்கு? இசை மாத்திரம் போதாதா?'' என்று சொன்னபோது, "அப்படியானல் வெறும் இசையை மாத்திரம் எழுப்புவதற்கு பறவைகளே போதுமே, அறிவுள்ள மனிதர்களாகிய நீங்கள் எதற்கு?'' என்று திருப்பிக் கேட்ட அந்த நாள்தான் கலையிலே கருத்துப் புரட்சி காண வேண்டுமென்று மனிதன் நினைத்த நாள்.

புரட்சி

புரட்சி என்றுலே, கத்தி, ரத்தம், பிணம், சிறை, விலங்கு, தடியடி, கண்ணீர்ப்புகை, கோட்டைச் சுவற்றின்மேல் புகை கக்கிக் கொண்டிருக்கும் பீரங்கிகள். அவற்றின் எரிவாய்கள், கசையடி, இராணுவம் ஆகிய இவையெல்லாம் கண் முன் தோன்றும் சிலருக்கு. புரட்சி என்றாலே இந்த பயங்கர விளைவுகளைத் தரக்கூடியதுதான் என்று நினைப்பது ஒருபுறமிருக்கட்டும். புரட்சி என்பது புரட்டு என்பதிலிருந்து வந்திருக்கக்கூடும் என்று நினைக்கின்றோம். ஏனெனில் ஒரு நூலைப் படித்துக்கொண்டேவரும்போது, இருபதாவது பக்கத்தைப் படித்து முடித்துவிட்டு மறு பக்கத்தைப் புரட்டுகிறோம். அப்படி என்றால் என்ன? இருபதாவது பக்கத்திலிருந்து இருபத்திஒன்றாவது பக்கத்துக்கு வந்துவிட்டோம் என்று பொருள். அப்படியானல் ஏட்டின் எண்ணிலே ஒரு புரட்சி செய்துவிட்டோம் என்றுபொருள். இப்படித்தான் புரட்சி என்ற சொல் தோன்றியிருக்க வேண்டுமென்று நான் யூகிக்கிறேன். என் யூகம், சரியோ, சந்தேகத்துக்குரியதோ; இதுவும் நான் செய்த கருத்துப் புரட்சி என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

கலையுலகில் புரட்சி செய்தவர்கள் "நாம்"!

கலை கலைக்காகவே!

இப்படி கலையிலே கருத்துப் புரட்சி வேண்டும் என்று சொல்லப் பட்டவுடனே, கலையென்ற பேரால் கடவுள்களின் காமாந்தகாரக் கதைகளுக்கு, இதிகாசங்கள், புராணங்கள் என்று பெயரிட்டு அழைத்த அந்த இருண்ட நெஞ்சினர், "கலையில் ஏன் கருத்தைப் பரப்புகின்றீர்கள்? கலை கலைக்காகவே இருக்கட்டுமே'' என்று சமாதானம் பேச வந்தார்கள். அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவன் திடீரென இடி சத்தம் கேட்டு எழுந்ததைப்போல், வைதிக உலகம், மதமண்டலம், பழமையின் பாசறை—எல்லாம் சேர்ந்து போருக்குத் தயாராகி விட்டன.

கோவலன், கண்ணகி

கோவலன் நாடகம் அன்று நடந்தது—இன்றும் நடந்துகொண்டிருக்கிறது. மாற்றமென்ன? கோவலன் திருமணப் பந்தலில் மாதவி சதிராடுவாள்; மாலை சுழற்றுவாள்; அது கோவலன் கழுத்தில் விழுந்துவிடும். இதைத் தெரிந்துகொண்ட மாதவி 'போய் வருகிறேன்' என்ற ஒரு வார்த்தையோடு புறப்பட மாட்டாள். "போய் வருவேன், போய்வருவேன், சபையோரே நான்'' என்று ஒரு பாட்டையே பாடி விடுவாள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த கோவலனுவது, 'சரி போய்வா' என்ற ஒரு வார்த்தையில் முடிக்கமாட்டான். போய் வருவேன் போய் வருவேன் சபையோரே நான்—என்று மாதவி பாடி முடித்து புறப்படும் சமயம், கோவலன் எழுந்து, "பூவையரே என்னைவிட்டு பிரியலாகுமோ'' என்று பாடிக்கொண்டே பின்னால் ஓடுவான். இது அந்தநாள் கோவலன் நாடகம்.

இந்த நாள் கோவலன் நாடகம் அப்படி இல்லையே! மாதவி கண்ணால் விடை கேட்கிறாள். கோவலன் கையால் தடுக்கிறான். தீர்ந்தது காட்சி! இது யார் செய்த புரட்சி? கோவலன் வேடம் போடுகின்றவரும், மாதவி

"பராசக்தி" காளி கல்லென நிரூபிக்கப்பட்டாள்!

வேடம் போடுகின்றவரும் கலந்து பேசிக்கொண்டு கலையிலே செய்த கருத்துப் புரட்சி! ஏனெனில், வாய்ப் பேச்சால் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றை சைகையாலேயே தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் அறிவு வளர்ந்துவிட்டது என்று பொருள்.

புரட்சி செய்தவர்கள் யார்?

கலையில் கருத்துப் புரட்சி செய்தவர்கள் யார்? குறிப்பாக நம் நாட்டைப் பொருத்தவரையில் நாடகத் துறையிலேயும், சினிமாத் துறையிலேயும் புரட்சி செய்தவர்கள், அறிஞர் அண்ணு அவர்களும்

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

முரசொலி

காதல் குற்றவாளிகள்

கதையல்ல; வரலாறு

பி.சி. கணேசன்.
பி.எஸ்ஸி;பி.டி.

(இடம்: இங்கிலாந்து, காலம்: பதினேழாம் நூற்றாண்டு)

இப்பொழுது ஹைகேட் என்றழைக்கப்படும் லண்டன்மாநகரின் ஒரு பகுதி. பதினேழாம் நூற்றாண்டில், லண்டனுக்கு வெளியே ஒரு சிறு கிராமமாய் இருந்தது. அவ்வழகிய கிராமத்தின் நடுவில், கோட்டை கொத்தளங்களால் பாதுகாக்கப்பட்ட ஒரு பெரிய மாளிகையிருந்தது. அந்த மாளிகைக்குச் சொந்தக்காரர் ஜேம்ஸ் கிராஃப்ட் என்ற ஒரு பிரபு. அது முதலாம் ஜேம்ஸ் இங்கிலாந்தை ஆட்சி செய்துகொண்டிருந்த காலம். ஜேம்சின் அரியணைக்கு ஆபத்து விளைவித்தோரும், விளைவிக்க எண்ணியோரும், மன்னனின் அதிகாரத் தீயால் சுட்டுப் பொசுக்கப்பட்ட நேரம். இராஜ விஸ்வாசிகளும், இராஜத் துரோகிகளும் ஒருவரையொருவர் ஒழிக்க, உதட்டிலே புன்னகையும், உள்ளத்திலே கள்ளமும் கொண்டு உறவாடிய நேரம். துரோகிகளை வேட்டையாடி ஒழிப்பதில் ஜேம்ஸ் மன்னனுக்குப் பக்கத்துணையாக இருந்து உதவியவர்தான் கிராஃப்ட் பிரபு.

கிராஃப்ட் பிரபு மிக்க செல்வாக்குபடைத்தவர். அப்பொழுதுதான 'புது உலகம்' என்கிற அமெரிக்கா கண்டு பிடிக்கப்பட்டு, அங்கிருந்து கொண்டு வரப்பட்ட விலையுயர்ந்த விநோதப் பொருள்களெல்லாம் பிரபுக்களின் மாளிகையை அலங்கரித்தன. கிராஃப்ட் பிரபுவின் மாளிகையில், இம்மாதிரி பொருள்கள் ஏராளமாக இருந்தன. விலையுயர்ந்த பொருள்களைச் சேகரித்து அழகு பார்ப்பதுதான் அவருடைய பிரதம பொழுது போக்கு. வாரத்தில் ஒரு நாள் அவர் தன்னுடைய மாளிகையைப் பார்வையாளருக்குத் திறந்து விடுவது வழக்கம். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், மக்கள் வந்து குழுமி அங்குள்ள பொருள்களைப் பார்த்து மகிழ்வர். அம்மாதிரி ஒரு நாள்....

அப்பொழுது ஜூன் மாதம். வெயில் கடுமையாக இருந்தது. ஏராளமான மக்கள் ஹைகேட் மாளிகையில் கூடியிருந்தனர். அப்பொழுது ஹைகேட் மாளிகையின் வாயிலில் ஒரு கிழவன் நின்று கொண்டிருந்தான். வழுக்கைத் தலையும், வளைந்த கால்களும் அவன் முதுமையை அதிகப்படுத்திக் காட்டின. முதுகில் ஒரு மூட்டை தொங்கிக் கொண்டிருந்தது. கையில் ஊன்றுகோல் ஒன்றும் வைத்திருந்தான். சற்று கூர்ந்து பார்ப்பவர்களுக்கு அவன் ஒரு வியாபாரி என்பது நன்றாகத் தெரியும். கண்ணின் மேல் கையை நிழலாக வைத்துக் கொண்டு. உள்ளேயுள்ள கூட்டத்தில் யாரையோ கூர்ந்து நோக்கினான்.

உள்ளேயிருந்து வேலைக்காரப் பெண்ணொருத்தி வெளியே வந்தாள். "அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டுக் கொண்டே அந்தக் கிழவன் அவளை நோக்கி ஓடினான்.

"என்னய்யா வேண்டும்?" என்று அந்தப் பெண் சீறினாள். கிழவனோ சிரித்தான.

"இதோ பாருங்கள், என்னிடம் பவளம், முத்து, பட்டு, வெல்வட், ஆடை, அணிகலன்கள் அத்தனையும் வியாபாரத்திற்காக வைத்திருக்கிறேன். சுற்றுப் பிரயாணம் செய்கின்ற சீமாட்டிகளுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் என்னிடம் இருக்கின்றன!"

"அதனால் எனக்கென்ன பலன்? நான் இப்பொழுது எங்கும் சுற்றுப் பிரயாணம் செய்யப் போவதில்லை" என்றாள் அவள்.

"நீங்கள் போகாமலிருக்கலாம். ஆனால் உங்களுடைய எஜமானி அரபெல்லா சீமாட்டி நாளை காலை டர்ஹாம் போகிறாரல்லவா? அவர்களுக்கு இவையெல்லாம் தேவையாயிருக்கும். என்னை அவரிடம் அழைத்துப் போங்கள். உங்களுக்கு மிகவும் நன்றி செலுத்துவார்" என்றான் கிழவன்.

"உன்னை அரபெல்லா சீமாட்டியிடம் அழைத்துப் போவதா!" —வியப்பும் கோபமும் கலந்த குரலில் கேட்டாள் அவள். "அடேயப்பா! என் கதி என்னாகும்? சரி. அது கிடக்கட்டும். எங்கள் எஜமானி நாளை டர்ஹாம் போவது உனக்கெப்படித் தெரியும்?"

கிழவன் பதில் சொல்லாமல் சிரித்தான். அவள் தன் வழிடைத் தொடர்ந்தாள். கிழவன் விடாமல் அவள்பின்னால் தட்டித்தடுமாறி ஓடினான். "அம்மா, அம்மா! இந்த மோதிரத்தை உங்கள் எஜமானியிடம் கொடுத்து. இந்த மோதிரத்திற்குரியவர் வெளியில் காத்துக் கொண்டிருப்பதாக அவரிடம் சொல்லுங்கள்' என்று அவளிடம் ஒரு மோதிரத்தை நீட்டினான்.

"உன்னோடு என்னய்யா பெரிய தொந்தரவாக இருக்கிறது நான் அரபெல்லா சீமாட்டியுடைய பணிப்பெண் மட்டுமல்ல; காவலாளியும் கூட. வெளியார் யாருடனும் எஜமானி எந்தவிதமான தொடர்பும் வைத்துக் கொள்ளாதபடி பார்த்துக் கொள்ளுவது என்னுடைய கடமை. இது எங்கள் எஜமானர் கிராஃப்ட் பிரபுவின் கட்டளை."

கிழவன் பொருள்பொதிந்த பார்வையொன்றைஅவள்மீது வீசினான். "ஏனம்மா, இவ்வளவு அழகான வைரமிழைத்த வளையல்களைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டுக் கொண்டே ஒரு ஜோடி வளையல்களைப் பையிலிருந்து எடுத்து அவள் கண்முன் நீட்டினான். சூரியனின் கிரணம் பட்டு வைரம் ஒளி வீசியது. வேலைக்காரியின் கண்களில் ஆவல் பளிச்சிட்டது. கிழவன் பலேபேர் வழி; "இந்த வளையல்கள் யாருடையது தெரியுமா? எல்டோரேடா இளவரசி, சர். வால்டர் ரலேக்குக் கொடுத்த அன்பளிப்பு. ரலேதான் இவைகளை இங்கிலாந்துக்குக் கொண்டு வந்தார்" என்று அதன் வரலாற்றினையும் சற்று விரித்தான்.

பணிப்பெண் வளையல்களைக் கையிலே வாங்கிக் கொண்டு திருப்பித்திருப்பி ஆச்சரியத்தோடு பார்த்தாள். 'உண்மையிலேயே இவைகளின் விலை மிக அதிகமாய்த்தான் இருக்கும்'' என்றாள் மகிழ்ச்சி பொங்க.

"அப்படி யொன்றும் பிரமாதம் இல்லை. நினைத்தால் நீங்கள்கூட அவற்றை வாங்கிக் கொள்ளலாம்"—கிழவன் வினயமாகப் பேசினான்.

"உண்மையாகவா?... ஊஹூம்... என்னைக் கேலி செய்கிறாய்!"

"அதெல்லாம் இல்லை. என்னை அரபெல்லா சீமாட்டியிடம் அழைத்துக் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்—வளையல்கள் உங்களுடையது. பணமே நீங்கள் கொடுக்கவேண்டாம்!"

"அய்யய்போ!...முடியவே முடியாது. என தலை போய்விடும்"

"அல்லது இந்த மோதிரத்தையாவது கொண்டுபோய் அரபெல்லா சீமாட்டியிடம் கொடுங்கள், போதும்!"

பணிப்பெண் சிந்தித்தாள். 'ஆமாம், இந்தச் சிறு காரியத்தைச் செய்வதில் அபாயமொன்றுமில்லை. கிடைக்கப்போவதோ, விலையுயர்ந்த வைர வளையல்கள்!'—முடிவுக்கு வந்துவிட்டாள்.

"ஏய், கிழவா! மோதிரத்தையும் வளையல்களையும் இப்படிக் கொடு"

கிழவன் முகத்தில் வெற்றிப் புன்னகை மலர்ந்தது. அவளிடம் மோதிரத்தைக் கொடுத்துவிட்டு, அவளுடைய கரங்களில் வைர வளையல்களைப் பூட்டினான். அவள் கால்களில் இறக்கை முளைத்தது போன்று தாவிக் குதித்து உள்ளே ஓடி மறைந்தாள்.

★

இங்கே குறிப்பிடப்படும் அரபெல்லா சீமாட்டி ஸ்டூவர்ட் வம்சத்தைச் சேர்ந்தவள்.

ஜேம்ஸ் மன்னனுக்கு இங்கிலாந்தின் அரியணைக்கு இருந்த உரிமையைவிட, அரபெல்லாவுக்கு அதிக உரிமையிருப்பதாக எண்ணிய பிரபுக்கள், வால்டர் ரலேயின் தலைமையில் சரித்திரப் பிரசித்திப் பெற்ற 'ரலேயின் சதி' என்ற ஒரு சதியை ஜேம்ஸ் மன்னனுக்கு எதிராக, அரபெல்லா சீமாட்டிக்கு ஆதரவாகச் செய்தனர். சதி தோல்வியடைந்தது. சம்பந்தப் பட்டவர்கள் தண்டிக்கப்பட்டனர். அரபெல்லாவின் சார்பாக சதி நடந்ததே தவிர, அவளுக்கும் இந்தச் சதிக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இதை ஜேம்ஸ் மன்னன் அறிந்திருந்தாலும், அறியாத பாவனையில் அவளைச் சிறையில் அடைத்தான். வெகுநாளைக்கு இந்த நிலை நீடிக்கவில்லை. அவளை ஒரு நிபந்தனையின் பேரில் விடுதலை செய்தான். அவள் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்பதுதான் அந்த நிபந்தனை. அவள் திருமணம் செய்து கொண்டால்தானே அவளுக்குக் குழந்தைகள் தோன்றி, அவனுடைய அரியணைக்கு சொந்தம் கொண்டாடும்!

அரபெல்லாவுக்கு இங்கிலாந்தின் அரியணைமீது ஆசையே கிடையாது.

ஆனாலும் விடுதலை பெற்றவுடன் சீமூர் என்ற சீமான் ஒருவன்மீது காதல்கொண்டு, அவனை இரகசியமாகத் திருமணம் செய்து கொண்டாள். திருமணம் முடிந்தபின் இருவரும் இரகசியமாகத் தப்பி, பிரான்சுக்குச் சென்று கணவனும் மனைவியுமாக வாழத் திட்டமிட்டனர். ஆனால் அதற்குள் அவர்களுடைய திருமண விஷயம் வெளிப்பட்டு, கைது செய்யப்பட்டனர். பிரிவி கவுன்சில்—இங்கிலாந்தின் உயர்நீதி மன்றம்—அவர்கள் திருமணம் சட்டப்படி செல்லாதென்று தீர்ப் ளித்தது. அக்காலத்தில் மன்னனின் ஆசைதான் நீதி மன்றங்களில் தீர்ப்பாக வெளிப்பட்டது. முடிவு...? சீமூர் பிரபு, டவர்ஆஃப் லண்டன் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். அந்த சிறைச்சாலைக்குள் ஒருமுறை சென்றவர்கள் பிறகு திரும்பி வெளி வந்ததே இல்லை! அரபெல்லாவோ ஹைகேட் மாளிகையில், கிராஃப்ட் பிரபுவின் மேற்பார்வையில் சிறை வைக்கப்பட்டாள்.

★

சிறையில் சிறகொடிந்த பறவையாகக் கிடந்த அரபெல்லா, செய்யும் வழியறியாமல், சிந்தை குழம்பி உட்கார்ந்திருந்தாள். அப்பொழுதுதான் கையில் வைர வளையல்கள் மின்னிட வேலைக்காரி அவளிடம் ஓடி வந்தாள். கண்களை நீர் மறைக்க அரபெல்லா உணர்ச்சியில்லாமல் வேலைக்காரியைப் பார்த்தாள்.

"அம்மா, அம்மா! இந்த மோதிரத்தைப் பாருங்கள்!" என்று கூறிக்கொண்டே அவளிடம் மோதிரத்தை நீட்டினாள். அதைப் பார்த்தவுடன் அரபெல்லா துள்ளி எழுந்து மோதிரத்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

சென்ற இதழில்...

...விபத்துக்கு ஆளான ஆனந்தி பாலையூர் மருத்துவ மனையில் சேர்க்கப்படுகிறாள். "நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்ற புலம்பலைத் தவிர, வேறெதுவும் பேசுகிற நிலைமையிலே அவள் இல்லை. நல்ல பிரக்ஞையே அவளுக்கு இன்னும் வரவில்லை. சிந்தாமணியை களங்கமுள்ள மலர் என்று பொல்லாங்கு கூறிவிட்டு, பின் மனசாட்சிக்கு பயந்து அவளை மாசிலிருந்து மீட்பதற்காக ஆனந்தி எடுத்துக்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை. கார் விபத்தில் சிக்குகிறாள். பாலையூர் மருத்துவ மனைக்கு டைகர் வருகிறான். அழகப்பனிடம் சிந்தாமணி — ஆனந்தி இருவரைப் பற்றியும் உரையாடல் நடத்துகிறான்...

7

"சிந்தாமணி, தங்கமானவளா? இன்று காலையில்தானே களங்கத்தின் அருகாமையில் அவளைக் கண்டேன். அவள் திடீரென்று தங்கமானவளாக சித்தரிக்கபபடுவது எப்படி? ஒருவேளை நீங்கள் எனக்குக் காட்டியது சிந்தாமணி அல்லவோ? அந்த நர்சுப் பெண் தவறுதலாக வேறொரு பெண்ணை எங்களுக்குக் காட்டி விட்டாளோ?' என்று பதைப்போடு கேட்டான் அழகு!

"இல்லை! இல்லை! நீங்கள் பார்த்தது சிந்தாமணியேதான்! அதில் சந்தேகமேயில்லை-சிவநேசரின் செல்வக் குமரியேதான்! அவள் தங்கமானவளேதான்!" -டைகர் அழுத்தந் திருத்தமாகப் பேசினான்.

"என்னய்யா ஒரே குழப்பம்! நான் பார்த்தது சிந்தாமணியேதான்-பக்கத்திலேயிருந்தது அவள் குழந்தையேதான்—நீர் கூறும் தங்கத்திற்குப் பொருள் என்ன; விளக்கும்!"

"அவசரப்பட வேண்டாம். கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய், தீர விசாரிப்பதே மெய் - என்ற பழமொழியை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய நேரம் இது! சிந்தாமணியின் அருகிலே யிருந்தது அவள் குழந்தையல்ல!"

"என்ன? என்ன? என்ன சொல்கிறீர்?" என்று துள்ளிக் குதித்தான் அழகப்பன்.

"உண்மையைத்தான் சொல்லுகிறேன். சிவநேசரின் குடும்பத்திற்கு ஆகாத பகைவர்கள் ஆனந்திக்கு பணத்தாசை காட்டி, இப்படி ஒரு பஞ்சமா பாதகத்தைச் செய்து விட்டார்கள்! அந்தக் கொலைக்கஞ்சாக் கொடியவர்களின் ஆசை வார்த்தையிலே மயங்கி ஆனந்தியும் சிந்தாமணியை சேறு என மெய்ப்பிப்பதற்கு முற்பட்டு விட்டாள். பகைவர்களுக்கு வெற்றி கிடைத்தது. ஆனால் அந்த வெற்றிக்குப் பிறகுதான் போராட்டம் ஆரம்பமாயிற்று. ஆனந்தியின் மனப் போராட்டமே அது! அந்தப் போரை வலுப்பெறச் செய்தேன் நான்! மருத்துவர் உலகிற்கே மாசுண்டாக்கி விட்டாய் என குற்றஞ் சாட்டினேன். இறுதியில் உண்மை வென்றது. திடீரென ஒருக் கணம் தீ போலச் சூழ்ந்த தீய நினைவு ஆனந்தியின உள்ளத்திலே அணைந்தது—தர்மத்தைக் காப்பாற்ற உங்களை நாடி ஓடி வந்தாள்! இப்போது அவளுக்குப் பதிலாக நான் பேசுகிறேன். சிந்தாமணி தங்கமானவள்!"

"நம்பாதே அழகப்பா, நம்பாதே! இந்த நாடகத்தை நம்பாதே!" என்று கூச்சலிட்டவாறு நயினா முகம்மது டைகரின் முன்னே வந்து பயங்கரத் தோற்றம் காட்டினான்.

"என்னப்பா கதைஅளக்கிறாய்-சிந்தாமணி சேறல்ல; செந்தாமரை என்று நிரூபிப்பதற்கு வந்திருக்கிறாயா? முடிந்து போன அத்தியாயம்! மூடப்பட்டு விட்ட புதைகுழி! மீண்டும் தோண்டி அழுகிப் போன சவத்தை வெளியே எடுக்காதே!"

-என்று டைகரின் முகத்தருகே தன் முகத்தைக் கொண்டு போனவாறு முரட்டுத் தொனியிலே முழக்கினான் நயினா!

"இல்லை; என் பேச்சை நம்புங்கள்! பகைவர்கள் செய்த பாதகம்தான் அது! சிந்தாமணியின் குழந்தையல்ல அது! வேறொரு குழந்தை—உங்களை ஏமாற்றுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட குழந்தை! என்னை நம்புங்கள்!" என்று கெஞ்சினான் டைகர்!

"முடியாது! இனியும் ஏதாவது உளறினால் உன் உயிர் உனக்கில்லை! உண்மையைச் சொல்லி விடு! உடனே உண்மையைச் சொல்லி விடு!" எனறவாறு நயினா முகம்மது டைகரின் கழுத்தை நெறிக்க ஆரம்பித்தான். டைகர் திக்குமுக்காடித் தத்தளித்தான். நயினாவின் கரங்கள் அவன் கழுத்தில் மேலும் மேலும் அழுந்த ஆரம்பித்தன.

"சொல்லடா சொல்! சிவநேசரும் சிவகாமியும் உனக்கு லஞ்சம் கொடுத்து அனுப்பியது உண்மைதானே! சொல்-உண்மையைக் கக்கு!" என உறுமினான.

-"விட்டு விடுங்கள் உண்மையைச் சொல்லி விடுகிறேன்!" என்று உயிர் போவது போலக் கத்தினான் டைகர். நயினாவின் கைகள் விலகின. டைகர் மூச்சு வாங்கிக் கொண்டே நின்றான்.

"ம்! சொல்லு!" என்று உறுமினான் நயினா! "இதோ-இதோ" என்று பயந்து நடுங்கினான் டைகர்.

"உன்னுடைய நடிப்பெல்லாம் இங்கு செல்லாது-மரியாதையாக உண்மை வரவேண்டும்" என்று முஷ்டி உயர்த்திக் காட்டினான், நயினா,

"நான் சொன்னதெல்லாம் பொய்தான், என்னை விட்டு விடுங்கள் ஓடி விடுகிறேன்."

"பொய்தானா? பிறகேனப்பா, சிந்தாமணி தங்கமானவள் எனறு பிரசங்கம் ஆரம்பித்தாய், என்னிடம்?" என்று சீறினான் அழகன்,

"தங்கமானவள் என்றுதானே சொனனேன்-தணலில் பட்டபிறகுதானே தங்கத்திற்கு ஒளி பிறக்கிறது! அதைப்போலத்தான் தவறுதல் என்னும் தணலிலே இந்தத் தங்கம் விழுந்தாள். அதிலே பிறந்த ஒளிதான் அந்தக் குழந்தை-என்று சொல்ல வந்தேன்!"

"அட அட அடா! என் புதுமைப் புலவனே! என்ன கற்பனை-என்ன கற்பனை-எல்லாம் லஞ்சம் படுத்துகிற பாடப்பா பாடு!" என சிரித்தான் ஆத்திரமாக நயினா!

"லஞ்சமல்ல நண்பர்களே; நெஞ்சம்! என் இளகிய நெஞ்சம்! ஒரு குடும்பம் வீணாக எங்களால் கெட்டுவிடக் கூடாதே யென்று எண்ணிய இளகிய நெஞ்சம்! அதன் விளைவுதான் உங்களிடம் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறேன் நான்!"



"சரி; விபரத்தைச் சொல்லு!"

"என்ன சொல்வது! அட இறைவா? கச்சி ஏகம்பா! உன் தலையிலே பாரத்தைப் போட்டுவிட்டுத்தான் சொல்லவேண்டும்!"

"பாரத்தைப் போடுகிறாயா? 'பவுண்டு'கணக்கிலா? 'டன்' கணக்கிலா? பார்த்துப் போடப்பா-பாராங்கல் உடைந்துவிடப் போகிறது!" என்று ஆத்திரத்தோடு கேலியும் பேசினான் அழகப்பன்,

"இப்படி யெல்லாம் பயல்கள் பாரத்தைப் போடுவார்கள் என்று பயந்துதானே எங்கள் ஆண்டவன், கல்லாகவும் இல்லை; சிலையாகவும் இல்லை; கண்ணுக்குத் தெரியாமலே இருக்கிறார்" என்று கடுகடுப்போடு கூறினான் நயினா.

"சரி! சரி! விஷயத்தைச் சொல்லட்டும்" என்று அழகப்பன் டைகர் முகத்தை உற்று நோக்கினான்.

டைகர் பேசினான்;

"ஒரு குடும்பம், ஒரு பெண்ணின் வாழ்வு, இவை யெல்லாம் கெடுவதற்கு நானும், என் சகோதரி ஆனந்தியும் காரணமாக இருக்க வேண்டுமென்றுதான் நீங்கள் விரும்புகிறீர்களா?"

"எங்களுக்கு உண்மை தெரிய வேண்டும்!"

"அடப்பாவி சிவநேசா! அப்போதே மாப்பிள்ளை வீட்டார் வந்தாலும் வருவார்கள் என்று எங்களுக்கு ஜாடை காட்டியிருந்தால் இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்காதே! 'நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று ஜம்பமாகப் பேசிவிட்டு, இப்போது எங்களை ஆபத்தில் மாட்டி விட்டாயே! முன்பே இவர்கள் வரப்போகிற சேதி தெரிந்திருந்தால், முன் எச்சரிக்கையாக குழந்தையையாவது மறைத்திருப்போமே!" என்று அங்கலாய்த்துக் கொண்டான் டைகர்!

"பார்த்தாயா, பயல் கக்குகிறான் விஷயத்தை!" என்றான் நயினா.

"விஷயமல்ல! விஷத்தைக் கக்குகிறேன். ஒரு குடும்பத்தின் எதிர்காலத்தை அழித்துப்போடும் ஆலகால விஷத்தைக் கக்குகிறேன்!" என்று தணிந்த குரலிலே டைகர் பேசினான்.

"ம்...பிறகு? தொடரட்டும் சேதி!" என்றான் நயினா!

"இன்னும் என்ன இருக்கிறது சேதி! ஆஸ்பத்திரிக்கு நீங்கள் இருவரும் வந்தபோது மாப்பிள்ளை வீட்டார் என்று எங்களுக்குத் தெரியாது! நீங்கள் வரப்போகிற

சேதி கூட எங்களுக்குத் தெரிய நியாயமில்லை! சந்தாமணியைப் பற்றிய சந்தேகமும் எங்களுக்கு எழுந்திட வழியில்லை! அவள் திருமணமானவள் என்றே எண்ணிக்கொண்டிருந்தோம. நீங்கள் அஸ்பத்திரியிலிருந்து ஆக்ரோஷ புருஷர்களாய் வெளியேறியபிறகு தான் விசாரித்தோம்! விஷயம் தெரிந்தது! ஐய்யோ, நம்மால் ஒருத்தியின் வாழ்க்கை கெட்டு விடுமே—என்று ஆனந்தி துடித்தாள்! நடந்தது நடந்து விட்டது; இனி என்ன செய்ய இயலும் -என்று ஆறுதல் கூறினேன். அவள் கேட்கவில்லை! சிந்தாமணி இளமையின் விஷமத்தால் எப்படியோ தவறியிருக்கலாம்; அதற்காக அவளது எதிர் காலம் முழுவதும் இருட்டறையாக மாறிவிடுவதா? என்னைப்போல அவளும் ஒரு பெண்தானே! அவளை எப்படியும் காப்பாற்றுவேன்! அவளை கற்புக்கரசி யென்று நிலை நாட்டுவேன்-எனச் சபதம் செய்தாள்! சிந்தாமணியின் குழந்தையை மறைப்பதற்கு ஏற்பாடு செய்தாள்! உங்களிடம் ஓடிவந்தாள்! ஆண்டவன் உங்கள் பக்கம் இருந்து விட்டான். உங்கள் குடும்பத்து குலதெய்வங்கள் உங்கள் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றி விட்டன. சிந்தாமணியெனும் ஒரு பெண்ணின் வருங்காலத்திற்காக உங்கள் குலப் பெருமை அழியக்கூடாது என்று தெய்வம் தீர்ப்பு எழுதிவிட்டது! அதனால் எங்கள் திட்டம் நிறைவேறவில்லை. ஆனந்தியை விபத்திலே சிக்கவைத்த ஆண்டவன், என்னையும் உங்களிடம் சிக்க வைத்து, உண்மையைக் கக்க வைத்துவிட்டார்!'' என்று பெருமூச்சோடு முடித்தான் டைகர்! அழகப்பன், நயினா இருவரையும் நன்றாக ஏமாற்றி விட்டோம் என்ற மகிழ்ச்சி அவன் உள்ளத்திலே கரை புரண்டோடியது. அதை வெளிக் காட்டிக் கொள்ளாமலே, வேதனையைக் கொட்டுபவனைப் போல காட்சியளித்தான் அந்தக் கயவன்.

எங்கே, ஆனந்தி விழித்துக் கொண்டு உண்மையை வெளியிட்டு விடுவாளோ என்ற அச்சத்தில் அவன் முன்னேற்பாடாகத் தீட்டிய சூழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியது!

இன்னொரு திட்டம்; எப்படியாவது அவர்களை பெங்களூருக்குப் பயணப்படுத்தி விடவேண்டுமென்பது! அதற்காக ஆரம்பித்தான் பேச்சை!

''நண்பர்களே! எங்கள் முயற்சியில் தோற்று விட்டோம். தெய்வம் ஜெயித்து விட்டது! பரவாயில்லை; சகோதரி ஆனந்தியை நான் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் காத்திருக்கத் தேவையில்லை! ஊருக்குப் புறப்படலாம்!'' என்று பீடிகை போட்டான்.

அப்போது, அழகப்பனின் டிரைவர் அவசர அவசரமாக அங்கு ஓடி வந்து,

''ஆனந்தி கண் விழிச்சாச்சு! தாயாரம்மாள் உங்களை யெல்லாம் கூப்பிடுகிறார்கள்!'' என்று கூவினான். மூவரும் உள்ளே சென்றார்கள் வேகமாக!

ஆனந்தி புது ஒளி நிறைந்த கண்களை விழித்தவாறுபடுத்திருந்தாள். அவளருகே டாக்டர்களும் தாயாரம்மாளும் நின்றிருந்தார்கள்.

டைகர் ஓடிப்போய், ''ஆனந்தி! ஆனந்தி!!'' என்று அன்பு வழியக் கூப்பிட்டான. அப்படி நடிக்க வேண்டிய கட்டம் அவனுக்கு, அது! ஆனந்தி அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையின் அர்த்தத்தை டைகர் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். அவனைச் சுட்டு சாம்பலாக்கியபார்வை அது! சுருண்டு போன புழுப் போல ஆகி விட்டான், அந்த அக்ரமக்காரன். அவன் பக்கமிருந்த பார்வையை அழகப்பன் மீதும் நயினா மீதும் திருப்பினாள் ஆனந்தி!

அவள் கண்கள் குளமாகி விட்டன. அந்தக் கலக்கத்தின் பொருளை உணர்ந்து கொண்டவர்கள் போல நயினாவும் அழகும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அவளோ, சிந்தாமணி உண்மையில் நிரபராதி என்பதை நிரூபிக்க வந்திருக்கிறாள். இவர்



களோ, அவள் இரக்க சுபாவமுடையவள்; அதனால் ஒரு பெண்ணின் வாழ்வைக் கெடுக்க மனமின்றி 'சிந்தாமணி நிரபராதி' என்று பொய் கூறுவதற்கு வந்திருக்கிறாள் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள்! அவள் எதற்கு வந்த போதிலும் சரி; மிக மிக நல்ல உள்ளம் படைத்தவள் என்ற தீர்ப்பை அழகுவும், நயினாவும் தங்களுக்குத் தாங்களே வெளியிடாமல் மனதிற்குள் எழுதி வைத்துக் கொண்டார்கள்.

''ஹார்லிக்ஸ் கொடுங்கள்!'' என்று டாக்டர்கள் சிபாரசு செய்தனர். அவசர அவசரமாக டைகர், ஹார்லிக்ஸ் தயாரித்து, அதை ஆனந்தியின் உதட்டருகே கொண்டு போனான். அதை அவள் மறுத்துவிட்டாள். அனைவரும் நினைத்தார்கள், அவளுக்கு 'ஹார்லிக்ஸ்' தேவை யில்லை யென்று! ஆனால் அவளுக்கு, இப்போது அந்த டைகரின் உபசாரம் தேவையில்லை! ஏன்; டைகரே தேவையில்லை! அவளே 'டைகரா'க மாறியிருக்கிறாள் இப்போது!

பாதகன் டைகரை பழிவாங்கும் புலிக் குணம் பெற்றுவிட்டது, அந்தப் புள்ளிமான்!

'ஓய்வாக இருக்கட்டும்-ஒன்றும் பேசாதீர்கள்' எனக் கூறி டாகடர்கள் அகன்றார்கள். இவர்களும் அங்கிருந்த நாற்காலிகளில் அமர்ந்தார்கள்.

''அம்மாடி! கண்ணு'' என்று அருகே சென்று செல்லமாகக் கொஞ்சினாள் தாயாரம்மாள்,

''ம்!'' என்று மாத்திரமே ஆனந்தியால் கேட்க முடிந்தது! ''கொஞ்சம் ஹார்லிக்ஸ் சாப்பிடடா அம்மா! ரொம்ப களைப்பாயிருக்கும்!''-இது தாயாரம்மாள்!

ஆனந்தி, கண்களைத் திருப்பி தாயாரம்மாளை ஏற இறங்கப் பார்த்தாள் மீண்டும் அவள் கண்கள் கலங்கின. தாயாரம்மாள் ஹார்லிக்சை எடுத்துக் கொடுத்தாள். அதை ஆனந்தி முழுவதுமே குடித்தாள். டைகருக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. அழகப்பனுக்கோ எண்ண அலைகள் இதயத்தில் குமுறி எழுந்தன!

''எவ்வளவு நல்லவள்-யாரோ ஒரு தவறு செய்த பெண்ணைக் காப்பாற்றுவதற்காக அவளுக்கு எவ்வளவு ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது! தன் நிலைமறந்து, எதிரே வருவது என்ன என்கிற உணர்ச்சியுமற்று, ஒரு பெண்ணுக்கு வாழ்வளிக்க விரும்பிய இவளது இருதயத்திற்கு ஈடு இணைதான் ஏது? அழகிமட்டுமல்ல; அன்பின் உரு! ஆகா, இவளது கண்களிலேதான் எத்தனை அபூர்வமான கவர்ச்சி! குஞ்சி அழகும், கொவ்வை இதழ் அழகும், கோமளக் கண் அழகும் அழகல்ல, இவைகள் அனைத்தையும் விட மேலான என் நெஞ்சத்து அழகே அழகு என்று சொல்லாமற் சொல்வதுபோல அவளது அற்புத விழிகள் அசைந்துகொண்டிருக்கின்றனவே! பிறர் கெடுவதையே விரும்புகிற இந்த வையகம், ஆனந்தி போன்ற ரோஜா மலர்களையும் அரளிப்பூக் கூட்டத்தினிடையே தூவியிருக்கிறது என்பதை நான் ஆதார பூர்வமாக உணர முடிகிறது! இந்த நல்ல பெண்மணிகளன்றோ நாட்டையும் வீட்டையும் வாழ்விக்க வந்த உத்தமிகள்! எனக்கு வர இருந்தவள் சிந்தாமணி!

அல்ல; அல்ல; புழுதி மண்ணிலே அறுந்து சிந்திவிட்ட மணி! சிதறிவிட்ட மணி! அவளுக்குப் பெயர்தான் சிந்தாமணி! இவளோ ஆனந்தி! பெயரிலே கொஞ்சம் நவநாகரீக பாணி மினுக்கிடுகிறது! உத்தியோகமும் அப்படித்தான்! ஆனால் உள்ளமோ தங்கம்! தங்கம் என்று கூடச் சொல்ல இயலாது-அந்த உபமானத்திற்கும் இந்த டைகர் புதிய வியாக்யானம் கொடுத்துவிட்டான். இது தணல் படாத தங்கம்! கரம் படாத முல்லை! களங்கம் படராத வெள்ளி நிலவு! இந்த மாதரசி எனக்கு வாழ்க்கைத் துணை யானால்?......''

கேள்விக் குறியல்ல; ஆவலைக் காட்டும் அறிகுறி எழுந்தது அழகப்பனின் இருதயத்தில்! நினைவு காட்டாறுதானே! எங்கு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் பிரயாணம் செய்யுமல்லவா? அந்தப் பிரயாணத்திற்கும் ஒரு முற்றுப்புள்ளி உண்டே! காட்டாறு காட்டிலேயே பரந்து விரிந்து மறைந்து ஒழிந்து விடும்! அல்லது கழனிக்கிடையே செல்லும் குட்டி வாய்க்கால் போல சிறுத்து கடலிலே கலந்து விடும்! அந்தக் கடலிலே கலக்கும் இரண்டாவது நிலையைப் பெற்றது அழகப்பனின் நினைவு நதி!

அவளை ஆனந்தி, நோய்ப் படுக்கையிலிருந்தவாறே கவர்ந்து விட்டாள். அவளது அன்பு இதயத்தை எப்படியும் தன் இதயத்தோடு பதித்துவிட வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டான்.

மணமகள் தேடும் படலத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு ஆனந்தியைத் தன் துணைவியாகக் கொள்ள வேண்டியது தான் தன் வாழ்வின் அடுத்த அத்தியாயம் என்று முடிவு செய்தான்.

அம்மாவையும் நயினா முகமதுவையும் ஊருக்கு அனுப்பி விட்டு, தான் பாலையூர் மருத்துவமனையில் ஆனந்திக்கு உதவியாக இருந்து, அந்தப் பணி புரியும் படலத்திலேயே குறிக்கோளை வெளியிட்டு விடலாமென்று திட்டம் வகுத்தான்.

''பாலையூர் மருத்துவ மனையில் ஆனந்தியோடு பழகும் வாய்ப்பு கிடைக்கும். அப்போது அவள் என்னை உணர்வாள்! நான் அவளை உணர்வேன்! எண்ணம் ஈடேறும்! வண்ணம் தீட்டப்படும் என் வாழ்வுக்கு'' எனக் கற்பனைசெய்தான். எப்படியும் நயினாவையும் அம்மாவையும் ஊருக்கு அனுப்ப வேண்டும்!

இதைப் போலவே நயினாவும் எண்ணிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் ஆனந்தியை மனதில் வைத்து பூஜிக்க ஆரம்பித்து விட்டான். சுருக்கமாகவே சொல்லிவிடலாமே; நயினா ஆனந்தியைக் காதலிக்கிறான். அவன் நினைக்கிறான்; எப்படியாவது அழகப்பனையும் தாயாரம்மாளையும் பெங்களூர் அனுப்பி விட்டு, பாலையூரில் தானிருந்து பணிபுரியலாமென்று! இவை எதுவுமே புரியாமல் டைகர் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்!

(தொடரும்)

★ நீட்டோலை ★

[தொடர்ச்சி]

தோழர்கள் கூண்டிலே நிறுத்தப் படுகின்றனர். "அடக்குமுறை பல உருவிலே வெளிப்படக் கூடும்!" என்கிருர் கடிதத்தில் அண்ணு!

போலீசாக வரும்—பொல்லாத வழக்குகளாக வரும் — துப்பாக்கி உருவில் — அரிவாள் உருவில்— கம்பு உருவில்—சத்தி உருவில்— இப்படிப் பல ரக அடக்குமுறைகள்—அச்சமூட்டும் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டே யிருக்கும். தேர்தல் ஜன்னி வலுக்க வலுக்க தேசபக்தர்களின் திருவிளையாடல்கள் — அவர்களைக் காப்பாற்ற அதிகாரிகள் ஏவும் அம்புகள் — பெருகிக்கொண்டே தானிருக்கும்!

நாமென்ன, இந்த மிரட்டல்களுக்குப் பயந்து விடுகிறவர்களா?

சிறைச்சாலை — நிலாச் சோறு நமக்கு!

சித்ரவதை — செவிக்கினிய கீதம்!

தூக்கு மேடையை தோகை மயிலாடும் நடன மேடைபோலக் கருதுகிறவர்கள் நாம்!

சாவுக்குப் பயந்தவர்களல்ல; மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்திடும் அழகிரியின் பரம்பரை! அஞ்சா நெஞ்சனின் மரபினர்! இலட்சியவாதிகள்! அப்பழுக்கற்ற இலட்சியவாதிகள்!!

தஞ்சை மாவட்டத்திற்கு அண்ணு எழுதிய வாசகம்— இன்று, தமிழகத்திற்கே பொருந்தும்!

இடைய கோட்டை கூட்டத்திற்கு சென்ற மாதம் 27-ம் நாள் சென்றிருந்தபோது-நமது கழகத் தோழர்கள் 'தூக்குமேடை' நாடகம் நடத்தினர். முன்கூட்டியே போலீசாரிடம் அனுமதி பெற்று பொதக்கூட்டமும் ஏற்பாடு செய்திருந்தனர். அது கண்ட தேசீயத்தார், போலீஸ் அனுமதிபெற்று நமது பொதுக்கூட்ட மேடை — நாடக மேடை இவைகளுக்கு மிக மிக அருகாமையிலேயே ஒலிபெருக்கி அமைத்து அவர்களும் நாடகம் போட்டனர். இது தூக்கு மேடை! அவர்களுடையது தூக்குத் தூக்கி! டில்லிக்குக் காவடி தூககித் தூக்கிப் பழக்கமல்லவா; அதனுல் தூக்குத் தூக்கி ஆடினர்! இரு ஒலிபெருக்கிகளும் மோதிக்கொண்டன! நமக்குப் பிறகு அவர்களுக்கு, அதே நாளில் போலீஸ் அனுமதி தருகிறது! நல்லவேளை, "தேனீ" நடைபெறவில்லை!

மறுநாள் பிரான்மலைப் பொதுக் கூட்டம். முதல் நாள் இரவு நமது கொடி மரத்தை காங்கிரசார் தூக்கிக் கொண்டுபோய்விட்டனராம்; நமது தோழர்கள் ஆத்திரத்தைக் கக்கினுர்கள்! நான் கேடடேன், "நமது கொடி என்ன மரம்?" என்று! செயலாளர் சொன்னுர், "புது மூங்கில் சார்!" என்று! "அப்ப சரிதான்! காங்கிரஸ் பிணத்தை தூக்கிப்போக அவர்களுக்கு அது தேவைப் பட்டிருக்கிறது! சரி; விட்டு விடுங்கள்!" **என்று நான் சொன்னேன்!**

இப்படி, சில்லரை விஷமங்கள் ஆரம்பமாகின்றன; தேர்தலை உத்தேசித்து தேசீயத்தார் திருவிளையாடல் புராணததின் புதிய அத்தியாயத்தைத் துவங்குகின்றனர்.

இந்தத் தொல்லைகளை சமாளிப்பது எப்படி என்ற பிரச்சினை உன் மூளையைக் குடைகிறதல்லவா? அதற்கு அண்ணு, அந்தக் கடிதத்திலேயே வழி சொல்லுகிருர் பார்! மீண்டும் படி கடிதத்தை!

> "கட்டுப்பாடாகவும் கண்யம் கெடாத முறையிலும் காரியத்தை நடத்த வேண்டுகிறேன்."

ஆச்சாரியாருக்கு காட்டப்பட்ட கருங்கொடி நிகழ்ச்சிக்கு மட்டுமல்ல; கழகம் ஈடுபடுகிற எல்லாக் காரியத்திலும் இந்த முறை இருக்க வேண்டுமெனபவர்தானே நமது அண்ணு! எதிரிகள் என்னதான் இழி மொழி—பழிச் சொல் கூறினுலும்— கொலை வெறித் தாண்டவமாடினுலும்—நாம் கையிலே ஏந்த வேண்டிய கேடயம்; கடமை, கண்யம், கட்டுப்பாடு—இவைகள்தான்!

நமது பணிகளைப் பழிப்பர்— ஒழிப்போம் உன்னை யென்று கொக்கரிப்பர்—ஏசுவர்-பேசுவர்- எதை எதையோ வீசுவர்-அப்போதெல்லாம் எனக்கு இந்தக் கடிதம் ஆறுதல் கூறப் பயன்படும் என்று நம்புகிறேன் பொன்முடி!

அந்த நம்பிக்கையிலேதான் நாட்டுக்கும் பயன்படட்டும் இந்தக் கடிதம் என்று விரும்பினேன. உன்னிடம் அனுப்பினேன் நீதான் உலகிற்கே இதைப் பரப்பி விடுவாயே!

> "ஆற்றலும் பண்பும் உள்ளவர்கள் என் தம்பிமார்கள் என்ற பூரிப்பும் நம்பிக்கையும் எனக்கு நிரம்ப-நிரம்ப!"

இந்த வரிகளைப் படிக்கும்போது ஆகா, எவ்வளவு இனிக்கிறது! தமிழ்நாடு என்று பெயர் வைக்குமாறு கேட்டபோது, மந்திரி பக்தவத்சலம், "ஏட்டுச் சர்க்கரை இனிககுமா?" என்ருரே; இனிக்கிறது பொன்முடி; இனிக்கிறது— அண்ணு தீட்டிய அந்தப் பழைய பாராட்டு இப்போதும் இனிக்கத்தான் செய்கிறது!

> "ஆற்றலும் பண்பும்உள்ளவர்கள் என் தம்பிமார்கள்!"

ஆச்சாரியாருக்குக் கருங்கொடி காட்டிய நாங்கள் மட்டுமா; ஆயிரம் ஆயிரம் தம்பிமார்கள் அல்லவா அத்தகைய ஆற்றலும் பண்பும் உள்ளவர்களாக அண்ணுவின் படையிலே அணிவகுத்து நிற்கிருர்கள்.

"அன்புள்ள தம்பி!" — என்று அவர் கடிதத்தை ஆரம்பிக்கிருர் —1951-ல் எழுதப்பட்டது! அதை இப்போது படிக்கிறேன்— அண்ணு எதிரே நின்று என் தோளிலே தட்டிக்கொடுத்தவாறு அழைப்பது போலவே இருக்கிறது! மெய்மறந்து போகிறேன்- புதிய உற்சாகம் பெறுகிறேன — போலிகள—பொல்லாங்கு பேசுவோர் — விடுதலை விருத்தத்தின் வேகம் உணராதவர் வீசுகிற ஈட்டிகள் எல்லாம் என் முன்னே முனை மழுங்கி விடுவதைக் காணுகிறேன்—தாணுடாவிடினும் தன் தசையாடும் உறவு கொண்ட தமையன் இருக்கிருர் என னருகே, என்று தைரியம் கொள்ளுகிறேன்! "என் இலட்சிய வீரனே! இமைப்பினில் ஓடி தாக்கடவாய் நாட்டுக்கு ஆய்" என ஆணை இட்டாலும் அட்டியில்லை அண்ணு எனறு பாய்ந்து செல்லும் பயமற்ற நெஞ்சு பெற்றிருகிறேன்.

என்னைப் போலவே நீயும்-ஏன்; விடுதலை வீரர்கள் அனைவருமே ஆறுதலும்-ஆற்றலும் - அஞ்சாத உள்ளமும் பெறுவர் எனபதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை! ஆகவே-

> அடக்குமுறை எந்த உருவில் வந்தாலும் அஞ்சிடத் தேவையில்லை!

இந்த உறுதியைத்தான் நமது மூத்தவரின் முடஙகல் - நமக்கு உபதேச உருவிலே அளிக்கிறது!

நீ காணுமலிருக்கக் கூடாதே யென்றுதான் கரைதாண்டிச் சென்றிருக்கும் உனக்கு கரை காணு மகிழ்ச்சியோடு அவரது கடிதத்தை அனுப்புகிறேன். படித்துப் பார்; பல முறை!

இங்ஙனம்,

உன் அன்புத் தோழன்.

★ "தீச்சுடர்" நிதிக்காக ★

சிறப்புச் சொற்பொழிவு!

திருப்பத்தூர் நியூ சினிமாவில்

17—6—56 ஞாயிறு காலை 9 மணிக்கு

தோழர் முல்லை சத்தி தலைமையில்

தோழர் மு. கருணாநிதி,

சிந்தனைச் சிற்பி

சி. பி. சிற்றரசு,

நடிப்பிசைப் புலவர்

கே. ஆர். ராமசாமி

ஆகியோர் பேசுவர்.

நன்கொடை: ரூ. 1, அணு 8, பெண்கள் அணு 4.

க. நெடுஞ்சோழன்,
(அமைப்பாளர்)

பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

தான். முயல் கூட்டத்துடன் விளையாடிக்கொண்டே அவன் வெகு தூரம் சென்றுவிட்டான் போலும். அவனுக்கு எதிரிலே கொடூர முகத்துடன் ஒரு மனிதன் — அவன் கையிலே ஒரு மரக்கம்பு இருந்தது. ராதா அடிபட்டிருக்கிருன் போலும்.

"தடிக் கழுதை! இவ்வளவு நேரம் என்ன செய்தே? அதோ, விறகு வெட்டி வச்சிருக்கேன்; தூக்கிக்கிட்டு வாடா நாயே! நேரமாச்சோ—முதுகுத் தோலை உறிச்சிடுவேன்!" என்று உறுமினுன் அந்த இருதடமில்லா மனிதன். கம்பைக் கீழே எறிந்தான். வேகவேகமாகப் போய் விட்டான்.

"...ம்...ம்...அம்..." என்று அழ ஆரம்பித்த ராதா, தன்னை மல்லிகா பார்ப்பதை கவனித்தான். உடனே "அம்மா" என்ற சொல் முற்றுப் பெருமலே நிற்க, "டீச்சர்" என்று அழுது கொண்டே கத்தினுன். கீழே அந்த மனிதன் வீசி எறிந்து விட்டுப் போன கம்பைக் கையிலே எடுத்துக் கொண்டான். பக்கத்திலே இருந்த விறகுக் கட்டை தலையிலே தூக்கிக் கொண்டான். அப்பப்பா! அதைத் தூக்க அவன் பட்டபாடு! தள்ளாடி நடந்தபடி மல்லிகாவிடம் வந்தான்.

'டீச்சர்! ரொம்ப நேரமாயிட்டு! நீங்க என் வீட்டுக்குவர வேண்டாம். அந்த அய்யா உங்களையும் அடிப்பார். இந்தாங்க...இந்தக் கம்பை கையிலே வச்சுக்குங்க. மான், முயல் ஏதாச்சும் வந்தா கம்பைக் காட்டுங்க போதும்; ஓடிவிடும். பயமில்லாம போவலாம்.. டீச்சர், எதையும் அடிச்சுடாதீங்க.. அப்புறம் அதோட அம்மா அழும்! ஆனு டீச்சர் இப்ப நான் அடி வாஙகினனே, அதைப் பார்த்து யாரும் அழவே மாட்டாங்க!...நீங்க போங்க...கம்பு பத்திரம்!..." என்ருன் திக்கிக் கொண்டே.

மல்லிகா திரும்பி நடந்தார். விறகுச் சுமையை தாங்க முடியாமல் சித்திரவதை பட்டுக் கொண்டிருந்த ராதா அங்கேயே நின்று கொண்டிருந்தான். அவன் இன்னும் வீட்டுக்கு நகரவில்லை. தன் 'டீச்சரை' அவன் பாதுகாத்து நின்ருன்.

மல்லிகாவின் கண்களில் நீர் ததும்பியது. "ஆனு டீச்சர்...இப்ப நான் அடி வாங்கினனே, அதைப் பார்த்து யாருமே அழ மாட்டாங்க" அந்த தழுதழுத்த சொற்கள் மீண்டும் ஒலித்தன. மல்லிகாவுக்கு திடீரென்று அழுகை வந்து விட்டது. அதே கணம் அவரது மனதிலே ஒரு புதிய எண்ணம்—ராதா அவரது மனதிலே எழுப்பி விட்ட கேள்விகளுக்கு விடைகிடைத்தேவிட்டது! ராதாவின் முகத்தில் படர்ந்து கிடந்ததே ஏக்கம், அதன் காரணம்? ஆமாம்; அந்த 'அருப்பு' தாயன்டைத் தேடித் தவிக்கிறது. இதுதான் அந்த அன்பிதயம் கொண்ட ஆசிரியை கண்ட விடை!

உடனே அவளரயும் அறியாமல் ஆலமரத்தை நோக்கி ஓடினுர்.

ராதாவின் தலையிலே இருந்த விறகுக் கட்டைப் பிடுங்கிஎறிந்தார். அவனை ஆரத் தழுவி அணைத்துக் கொண்டார்.

"நான் அடிபட்டதுக்காக நீங்க ஏன் அழுவுறீங்க? என் அம்மா தானே அழணும்? நீங்களும் ஒரு அம்மாதானு? சரிதான், நீங்கள் டீச்சர் அம்மாவா?" என்றெல்லாம் ஏதேதோ கேள்விகளைக் கேட்டுக் கொண்டே வந்த ராதாவைத் தூக்கியபடி, காட்டுப்பாதைவழியே தன் வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தார் அந்த விடை கண்ட ஆசிரியை!

—சொர்ணம்

கண்ணியத்தின் காவலர்!

விலகி விட்டார்—அன்னையின் அடிமைத் தளையை உடைத்தெறிவதையே தலையாய நோக்கமெனக் கொண்ட ஆற்றலரசன்!

எனக்கு இருமல் அதிகமாகி விட்டது; ஓய்வு பெற்றாக வேண்டும்—என்ற சொத்தைக் காரணத்தைக் காட்டி, பொது மக்கள் தடவிய கரியை வழித்தெறிந்து விட்டு ஓட்டம் பிடித்தாரே ஆச்சாரியார்—அவரைப் போல அல்ல; தந்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக பதவியை விட்டு விலகுகிறார் சிங்கப்பூர் பிரதமர் டேவிட் மார்ஷல்!

சின்னஞ்சிறு பூமி; ஆனாலும் செல்வம் குலுங்கும் இடம்!

சிங்கப்பூர்—ஆசியாவின் திலகம்! ஏன்; ஆசியாவின் கஜானா என்று கூடச் சொல்லி விடலாம்—பொருளாதாரப் புழக்கத்தை மட்டும் வைத்துக் கணக்கிட்டோமானால்!

—அளவிற் சிறிய; அந்தஸ்தில், விடுதலை பெறும் ஆர்வத்தில் மிகப் பெரிய சிங்கப்பூருக்குத்தான் விடுதலை கேட்டார் டேவிட் மார்ஷல்!

ளையைப்போல் இருக்
கா சுதந்திரம்?—
விடத்தின் விடு
ரைப் பார்த்துக்
ர நாணிக் கண்
ளவிற்கு கோணிப்
ாலிருக்கும் சிங்கப்
விடுதலை முழக்க
த வீரர்!

றிய மண்மேடும்,
போல் தலைநிமிர்ந்து
சுதந்திரம்—என்று
யும் என்பதற்கு
ர்ஷலின் முயற்சி
ான்று!

விலகி விட்டார்,
பிரதமர் பதவியி

லகச் சொல்லிவிட்
பிரதிநிதிகள் நம்
ாத் தீர்மானம்
வந்து விட்டார்
ாறு கருதிட வேண்

விடுதலை பெற்றுத் தருவேன்; இல்லையேல் எனக்குப் பதவி வேண்டாம்—என்ற சபதத்தின் பேரில்தான் அவர் பிரதமரானார். பின் வாதாடினார் ஆங்கில ஏகாதிபத்திய வாதிகளிடம்!

ஆனால் ஒத்துவரவில்லை அந்த முற்றிய ஏகாதிபத்தியப் பித்தர்கள்!

சிங்கைக்கு டொமினியன் அந்தஸ்தோடு, அதன் கவர்னர் ஜெனரலும் ஒரு மலாய்க்காரராகவே இருக்க வேண்டும்—இது மார்ஷலின் வாதம்!

முடியாது; ஒரு வெள்ளையரைத்தான் கவர்னர் ஜெனரல் பதவியில் அமர்த்துவோம்—இது இங்கிலாந்தின் வாதம்!

முடிவு?

பேச்சு வார்த்தைகள் முறிவுபட்டன; வெள்ளையர் ஒருவரைக் கவர்னர் ஜெனரலாக வைத்து, டொமினியன் அந்தஸ்து என்ற பெயரிலே நடத்தப்படும் பொம்மலாட்டம் எங்களுக்குத் தேவையில்லை—என்று கூறி விட்டுத் திரும்பி விட்டார் டேவிட்!

அதன் விளைவுதான் சென்ற கிழமை நடைபெற்ற இந்தப் பதவி விலகல் படலம்!

இப்போது அவரது கட்சியைச் சேர்ந்த லிம் யூ ஹாக் என்னும் சீனர் பிரதமராகியிருக்கிறார்.

பர்மாவுக்குப் பூரண சுதந்திரம் வழங்கியவர்கள்—இந்தியாவிற்கும், பாகிஸ்தானத்திற்கும் சிறகடித்துப்பறக்க உரிமை தந்தவர்கள்-இலங்கையை இன்முகத்துடன் ஏகாதிபத்தியக் கூண்டிலிருந்து திறந்து விட்டவர்கள்-சிங்கப்பூர் சீறி எழும்போது அதன் பிடரியைப் பிடித்துத் தள்ளுகிறார்கள்.

பாவம்; டேவிட் தோல்விச் சின்னமாகி விட்டார்—என்று சிரித்து மகிழ்கிறார்கள் சிலர்!

நமக்கெல்லாம் கண்ணீர் வருகிறது, மார்ஷல் போன்ற மாண்புமிக்கவர் ஒருவர் ஒதுங்கிச் செல்கிறாரே என்பதை நினைக்கும்போது!

அவ்வாறு நினைத்திடத் தேவையில்லை—என்று உறுதியளிப்பது போலிருக்கிறது சிங்கை தரும் செய்தி!

செஞ்சீனத்து வெளிநாட்டு அமைச்சர் டேவிட்டைச் சந்திப்பதற்கு தனக்கிருக்கும் ஆவலைத் தெரிவித்திருக்கிறார்.

"நான் அவரைச் சந்திக்கும்போது ஏதாவது முக்கிய செய்திகள் நிகழ்ந்தால் அவைகளை அவ்வப்போது சிங்கப்பூர்பிரதமருக்குத் தெரிவிப்பேன்!" என்று கருத்து தெரிவித்திருக்கிறார் டேவிட்!

அவர் 'மாஜி'யாகி விட்டார்-மக்களுக்குத் தந்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக!

ஆனால், நாங்கள் பதவிக்கு வந்தால் தெருவிலே தேன் ஓடும்; பால் பெருக்கெடுக்கும்-என்று மார்தட்டிப் பேசியவர்கள் உயிரோடிருக்கிறார்கள். தொகை தொகையாய்ப் பட்டினிப் பட்டாளம் தெருவிலே ஊர்வலம் வருகிற நேரத்திலும்!

"என் பேச்சைக் காப்பாற்ற முடியவில்லை; எனவே கண்ணியத்தைக் காப்பாற்றுவதற்காக விலகுகிறேன்"-அறிவித்து விட்டார் மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்ட மாவீரர்! அங்கே; சிங்கப்பூரில்!

ஆனாலும், எங்கள் பதவிக் காலத்தில் கருப்பு மார்க்கெட்காரர்களை சந்தியிலே தூக்கிலிடுவோம்-என்று கர்ஜனை புரிந்தவர்கள் செத்துவிடவில்லை; ஆசிய ஜோதிகளாக, பாரதரத்னக்களாக பதவித் தேனிலே ஈயாக மொய்த்துக் கிடக்கிறார்கள்!

அவர்களெல்லாம் மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான் உருவெடுத்து கண்ணியம் காப்பாற்றட்டும்; இல்லையேல் முக்காடிட்டு மூலையில் ஒடுங்கட்டும்!

டேவிட் மார்ஷல்

நாஞ்சில் மாவட்ட
தி. மு. க.
நிதிக்காக
இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன்
குழுவினர் நடிக்கும்
இரு நாடகங்கள்!
★
நாகர்கோயில்
லட்சுமி தியேட்டரில்
22--6--56 அன்று
மு. கருணாநிதியின்
மணிமகுடம்
★
23--6--56 அன்று
கரூர் சேதுராமன் தீட்டிய
புதுவெள்ளம்
கட்டணம்:
ரூ. 10, 5, 3, 1-8-0, அணா 12.

காதல் குற்றவாளிகள்...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

தைக் கையில் வாங்கிக்கொண்டாள். "ஆகா, இது என் கணவருடையதல்லவா?" ஆவல் மீதூற அவளை வினவினாள்.

"இந்த மோதிரத்திற்குச் சொந்தக்காரர், வெளியே நிற்கிறாரம்மா!"

"உண்மையாகவா? அவர் இப்பொழுது எப்படி இருக்கிறார்? அழகான இளைஞராக இருக்கிறாரல்லவா?"

"ஊஹூம், அதுதான் இல்லை! வயது முதிர்ந்தவராய், கால் ஊனமாய், கையில் தடியூன்றி வந்திருக்கிறாரம்மா! இங்கு அவரை அழைத்து வரட்டுமா?"

"ஐயோ, சிறை வாழ்க்கை அவரை முதுமைக் கோலத்திற்கல்லவா கொண்டு வந்துவிட்டதுபோலிருக்கிறது. நீ போய் மெதுவாக காவலாளிகள் யார் கண்ணிலும் படாமல், அவரை இங்கே அழைத்து வா பார்க்கலாம்!"

கை வளையல்களைப் பார்த்துக் கொண்டே வெளியே ஓடினாள் வேலைக்காரி!

சற்று நேரத்திற் கெல்லாம் முதுமை ஆதிக்கம் செலுத்தும் வியாபாரி ஒருவன் மிடுக்கான நடையுடன் அரபெல்லா முன் வந்து நின்றான். சற்று நேரம் அரபெல்லா அவனையே உற்றுப் பார்த்தாள். திடீரென்று 'சீமூர்' என்று கூவியபடியே அவனைப் போய்த் தழுவிக் கொண்டாள். புனை உடையைக் களைந்தெறிந்து விட்டு சீமூரும், அழகுமிக்க இளைஞனாக அவள் கண்களுக்கு விருந்தளித்து நின்றான்.

"பிரபு! நீங்கள் எப்படி லண்டன் சிறையிலிருந்து தப்பி வந்தீர்கள்? இருவரும் இனி எப்பொழுதுமே சந்திக்க முடியாது என்றல்லவா எண்ணினேன்!"

"அரபெல், அதைப் பற்றியெல்லாம் இப்பொழுது பேச நேரமில்லை. நாம் இருவரும் இப்பொழுது தப்பித்துப் போய்விட வேண்டும். காலதாமதமானால் நான் லண்டன் சிறையிலிருந்து தப்பிய செய்தி வெளிப்பட்டு வேந்தனின் ஆட்கள் என்னைத் தேடிக் கொண்டு இங்கு வந்து விடுவார்கள். ஆகவே, நான் கொண்டு வந்திருக்கும் ஆணுடையை அணிந்து கொண்டு, மெதுவாகத் தப்பி, பின்புறமுள்ள தோட்டத்திற்கு வந்து விடு. அங்கே இரண்டு குதிரைகள் நமக்காகக் காத்திருக்கின்றன. உடையணிந்து வெளியேற உன் விஸ்வாசமுள்ள வேலைக்காரி உதவி செய்வாள்' என்று கூறிக் கொண்டே, வேலைக்காரியின் கழுத்தில் விலையுயர்ந்த வைரமாலையொன்றை சீமூர் பூட்டினான். வேலைக்காரியும் புளகாங்கிதம் அடைந்து வேண்டிய உதவி செய்வதாக ஒப்புக் கொண்டாள்.

"அரபெல், நேராக கிராவ்செண்டு போய், அங்கிருந்து புறப்படும் கப்பலில் கலே போய்ச் சேர்ந்துவிட வேண்டும். திட்டம் நிறைவேறக் காலதாமதம் ஆனால் நம்மிருவர் உயிருக்கும் ஆபத்துதான்!' என்று பேசிக் கொண்டே சீமூர் மீண்டும் கிழ வியாபாரியானான்.

அவன் போவதையே அரபெல்லா ஆவலோடு பார்த்துக் கொண்டு நின்றாள்.

★

★ அஜந்தா ஓவியம்
போல் அழகான
அச்சு வேலைக்கு..

சித்ரா பிரிண்டர்ஸ்,
25-27, பண்டி வெங்கடேச நாயக்கன் தெரு,
(கெல்லட் பள்ளிக்கு எதிரில்)
திருவல்லிக்கேணி, சென்னை-5.

* திருமண அழைப்பிதழ், வாழ்த்திதழ், நோட்டீசுகள், புத்தகங்கள் மற்றும் எல்லாவித அச்சு வேலைகளையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம்.

அன்று மாலை நியூகேட்டிலிருந்து கிராவ்செண்டு செல்லும் பாதையில் வயோதிகன் ஒருவனும், வாலிபப் 'பையன்' ஒருவனும் குதிரையில் வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தனர். தோற்றத்தில் வாலிபனாகத் தோன்றினாலும், அவன் களைப்பினால் அடிக்கடி துவண்டு விழுந்து கொண்டிருந்தான். வயோதிகனே, அவன் களைப்பை நீக்கி, உற்சாகமூட்டிக் கொண்டிருந்தான். பின்னால் எவரேனும் தொடர்ந்து வருகிறார்களோ என்ற கலவரம் அவர்கள் இருவரிடமும் இருந்தது.

நடு இரவில் இருவரும் கிராப்செண்டு துறைமுகத்தை அடைந்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி, அங்கு கப்பல் எதுவும் அவர்களுக்காகக் காத்திருக்கவில்லை!

"சீமூர், நீங்கள் சொன்னபடி..."

"பயப்படாதே அரபெல்...எப்படியும் கப்பல் சற்று நேரத்திற்கெல்லாம் வந்துவிடும்..."

ஆனால், சீமூரின் உள்ளத்திலும் பயம் இருந்தது.

காலம் மெதுவாக நகர்ந்தது. சில படகோட்டிகள் வந்து சீமூருக்கு மரியாதை செய்தனர்.

"பிரபு, உங்களை ஏற்றிச் செல்ல வேண்டிய கப்பல், லீ துறைமுகத்தில் உங்களுக்காக இருக்கிறது. படகில் ஏறிக் கொள்ளுங்கள், பொழுது விடியுமுன் லீ போய்ச் சேர்ந்துவிடலாம்" என்றனர் படகோட்டிகள்.

காத்திருக்கும் அபாயத்தைவிடப் படகில் செல்லும் அபாயம் குறைவு என எண்ணிய சீமூர், அரபெல்லாவுடன் படகில்போய் ஏறிக்கொண்டார். படகும் லீயை நோக்கி வேகமாகப் புறப்பட்டது.

லீயில் கப்பல் தயாராக நின்றது. கப்பல் தளத்தை விட்டுக் கீழிறங்கி வந்து கப்டல் தலைவன் சீமூரையும் அரபெல்லாவையும் வரவேற்றான்.

சீமூரும், அரபெல்லாவும் கப்பலுக்குள் சென்றனர். காற்று சரியில்லாததால் கப்பல் புறப்படத் தாமதமாயிற்று. நாழிகை ஆக ஆக காதலர்களின் நாடி தளர்ந்தது. கடைசியில் கப்பல் புறப்பட்டேவிட்டது! காதலர் இருவரும் பாதுகாப்பு உணர்ச்சியோடு, இன்பம் மீதூற ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொண்டனர்.

★

"சீமூர், சீமூர்!"

கப்பல் தலைவனின் குரல் கேட்டு சீமூர் அறையைவிட்டு வெளியே வந்தான். சீமூரை மேல் தளத்திற்கு அழைத்துப்போய் சுட்டிக் காட்டினான். வெகுதூரத்திற்கப்பால் கப்பல் ஒன்று விரைந்து வந்துகொண்டிருந்தது.

சீமூரின் தலை ஒருகணம் சுழன்றது; இருந்தாலும் மெதுவாக சமாளித்துக் கொண்டான்.

"அந்தக் கப்பல்..."

"பிரான்சு போகும் வியாபாரக் கப்பலாயிருக்கலாம்" என்றான் கப்பல் தலைவன்.

"இல்லை நண்பா, அந்தக் கப்பல் நம்மைப் பிடிக்கும் நோக்கத்தோடுதான் விரைந்து வருகிறது என்று நினைக்கிறேன். எந்த நிலையையும் நாம் சமாளிக்கத் தயாராயிருப்பதுதான் நல்லது என்று எண்ணுகிறேன்" என்றான் சீமூர்.

கப்பல் தலைவன் உத்தரவிட்டான். கப்பல் விரைந்து செல்ல எல்லா பாய்மரங்களும் அவிழ்த்துவிடப் பட்டன. கப்பலும் காற்றோடு போட்டியிட்டு விரைந்தது.

இருந்தும் என்ன? பின்னால் வந்த கப்பல் நிமிஷத்திற்கு நிமிஷம் சீமூரின் கப்பலை நெருங்கியது. வந்த கப்பல் யுத்தக் கப்பல்—சீமூரையும், அவன் கடத்திச் செல்லும் அரபெல்லாவையும் பிடிப்பதுதான் அதன் நோக்கம்.

சற்று நேரத்திற்கெல்லாம் சீமூரின் கப்பலோடு, வந்த கப்பல்மோதிவிடும். சீமூர் கப்பலின் பீரங்கிகள் வெடித்தன. வந்த கப்பலின் பீரங்கிகள் ஆவேசமாக முழங்கின. போர் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. சீமூரின் கப்பல் மூழ்க ஆரம்பித்தது. உடனே வந்த கப்பலிலுள்ள போர் வீரர்கள் சீமூர் கப்பலில் குதித்தனர். கிரஃப்ட் பிரபுவே அவர்களுக்குத் தலைமை தாங்கி வந்தார். தாக்குதல் அதிகரிக்கவே சீமூர் அறைக்குள் ஓட முயன்றான். கிராஃப்ட் பிரபுவின் துப்பாக்கி வெடித்தது. சீமூர் பிணமானான்.

அரபெல்லா அவன் சடலத்தின் மீது சாய்ந்து தேம்பினாள். பலம் பொருந்திய இரண்டு கரங்கள் அவள் கூந்தலைப் பற்றி இழுத்துக் கொண்டு போயின. அவள் மூர்ச்சையானாள். அவள் மூர்ச்சை தெளிந்து எழுந்தபோது, முன்பு சீமூர் அடைக்கப் பட்டிருந்த லண்டன் சிறைச்சாலையில் இருப்பதை உணர்ந்தாள். நடந்தவற்றை எண்ணிப் பார்த்தாள். அவள் மூளை குழம்பியது. "சீமூர், சீமூர்" என்று கூச்சலிட்டாள். சிறைச் சுவர்கள் அவள் கூச்சலை எதிரொலித்தன. பசுந்தோகை மயிலென சீமூரின் உள்ளத்தை மகிழ்வித்த அரபெல்லா பைத்தியக்காரி அரபெல்லாவாக சிறையிலேயே மாண்டாள்!

★ ★ ★

★ **முத்து நூலகம்.** ★

வெளியீடுகளும், விற்பனை உரிமை நூல்களும்

பாரதியார் கவிதைகள் (உயர்வு)	...	5	8	0
,, ,, (சாதாரணப் பதிப்பு)	...	5	4	0
கழைக்கூத்தியின் காதல் (பாரதிதாசன்)	...	1	4	0
குறளோவியம் (மு. கருணாநிதி)	...	0	8	0
சக்ரவர்த்தியின் திருமகன் (மு. கருணாநிதி)	...	1	4	0
அரச குமாரி (ஆசைத்தம்பி)	...	1	8	0
கண்கள் (ர. தணலன்)	...	1	8	0
துறவி துப்பறிகிறார் (ரவி) (பாக்கெட் புக்)	...	1	0	0

அச்சில் இருப்பவை

காதல் சக்கரம் (தில்லை வில்லாளன்)
சித்திரப்பாவை (ஏ. கே. வில்வம்)
அக்கினிக் கோபம் | (கோவி. மணிசேகரன்)
மேனாட்டு மேதைகள் |

மற்றும்

காண்டேகர், அறிஞர் அண்ணா, மு. வ., மு. க., நெடுஞ்செழியன், கல்கி, ராஜாஜி, புதுமைப்பித்தன், லக்ஷ்மி, விந்தன், ஆசைத்தம்பி, மற்றும் எண்ணற்ற ஆசிரியர்களின் நூல்களும் எம்மிடம் கிடைக்கும்.

வியாபாரிகளுக்குத் தக்க கழிவு உண்டு.

விபரங்களுக்கு: **முத்து நூலகம்,**
8. ஜி. பைகிராப்ட்ஸ் ரோடு,
சென்னை-5.

கள்ளம் கபடமற்ற குழந்தைகள்—எதையும் புதுமையாக எண்ணி 'ஆ! அப்படியா!' என்ற ஆச்சரியத்துடன் பார்க்கும் அவர்களின பிஞ்சு மனம்—அவர்களுடன் பழகுவதில் தான் எத்தனை இன்பம் இருக்கிறது. அப்பப்பா! ஆத மழலை மொழி—மாசற்ற கலகல வென்ற சிரிப்பு—குழந்தைகள் 'நாட்டின் செல்வங்கள்' என்று எழுதி வைத்தது ஏட்டளவில் அல்ல; அல்ல என்பதை—உணர்த்துகிறதே!

சிரிப்பால், சிரிப்பூட்டும் செய்கைகளால் சிந்தை மகிழ்விக்கும் இத்தகைய தங்கப் பாப்பாக்களின் கூட்டத்தில் சிக்கிவிட்டால்...பள்ளி ஆசிரியராகப் பணியாற்றுபவர்கள்தான் விவரிக்க வேண்டும், அந்த மகிழ்ச்சியை!

அந்த கிராமத்துக்கு வந்தபோது என்னவோ போலத்தான் இருந்தது பள்ளி ஆசிரியை மல்லிகாவுக்கு. மின்சார வர்ண ஜாலங்கள் நிறைந்த நகரத்திற்கும், வெறும் அகல் விளக்கையே இன்னும் நம்பிக் கிடக்கும் கிராமத்திற்கும்தான் எத்தனைவேறுபாடுகள்! மின்சாரம் புதுமைதான்; ஆனால் நம்ப முடியாததாயிற்றே! எச்சரிக்கை ஏதுமின்றி 'கப்'பென்று அணைந்து விடுமே!—என்றெல்லாம் அவர் தன் உயிர்த் தோழிகளுடன் வாதம் செய்திருக்கிறார். ஆனால் கிராமத்து அகல் விளக்குகளுக்கு மத்தியிலேதான் அவர் மின்சாரத்தின் பெருமையை அறிய முடிந்தது. அகல் விளக்கு என்ன இருந்தாலும் பழமைதானே!

நாற்பது ஐம்பதுக்கு மேற்பட்ட சிறுவர்கள்—அவர்களுக்கு குடை விரித்து நிற்கும் கீற்றுக்கொட்டகை—அதற்குள்ளிருந்து அதோ, அந்த ஆசிரியையின் குரல் எழும்புகிறது. "தம்பிகளே! கட்டுரை எழுதுவது எப்படி என்பதைச் சொன்னேன். இப்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? கட்டுரையே எழுத வேண்டும்...!"

"ஓ!" என்ற பல குரல்கள் ஏக காலத்தில் எழுந்தன. தம்பிகளின் ஆர்வத்தை எண்ணி மகிழ்ந்தார் மல்லிகா.

"நான் உள்ளே வரலாமா டீச்சர்?"

மூடியிருந்த மூங்கில் கதவுக்குப் பின்னால் ஆறு வயதுச் சிறுவன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

நீண்ட தூரம் நடந்து வந்தவனைப் போல அவன் களைத்திருந்தான். அவனது அழுக்கடைந்த கிழிந்த சட்டையில் ஒரே வியர்வை. சிவந்த முகத்திலே முத்து முத்தாக வியர்வைத் துளிகள்! சீவப்படாத தலையிலே இலைச் சருகுகள் புகுந்து கொண்டிருந்தன. சிறையிலே அடைபட்டுக் கிடக்கும் கைதியைப் போல் தெரிந்தது அவன் மூங்கில் சட்டங்களுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த தோற்றம்!

"என்ன ராதா, தினம் தினம் தாமதந்தானா நீ?"—ஆசிரியை சற்று கோபத்துடனதான் கேட்டார். அந்தக் கோபத்தையே புரிந்து கொள்ள முடியாதவன் போல் புத்தகப் பையை தோள்மேல் சாத்தியபடியே நின்று கொண்டிருந்தான் அவன். அவனது வட்ட முகம்—அதிலே என்னவென்று புரிந்து கொள்ள முடியாத—எப்படியும் கண்டுதெரிய முடியாத—ஒரு இனம் தெரியாத ஏக்கம்!

ஆசிரியை கோபித்துக் கொண்டபோது அவன் உள்ளத்தில் என்ன என்ன எண்ணங்கள் தோன்றின? அதை எடுத்துக் காட்டவில்லை அவனது முகம். அதிலே அந்த பழைய ஏக்கம்தான்!

"இப்படி தாமதமாக வந்தால் என்னத்தைப் படித்துக் கிழிக்கப் போகிறாய்?"—இப்போது கோபம் சற்று குறைந்திருந்தது; இரக்கம் காணப்பட்டது.

அந்த இரக்கத்தை, தான் உள்ளே நுழைய அனுமதி என்று நினைத்த ராதா மூங்கில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். நேரே தன் இடத்தில் போய் உட்கார்ந்தான்.

"தம்பிகளே! கட்டுரை எழுத வேண்டுமென்று சொன்னேனே, "அம்மா" என்ற தலைப்பில் எழுத வேண்டும். தெரிகிறதா?...ம... ராதா, உன்னைக் கூடத்தான்!" என்று ஆசிரியை சொன்னார்.

மறுகணம் எல்லா பையன்களும் விறு விறு என்று எழுத ஆரம்பித்தார்கள். ஆனால்...ராதா இரண்டு கண்களையும் அகலத் திறந்து கூரையைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தான். "என்ன பிள்ளையப்பா இது!" என்று அலுத்துக் கொண்டார் ஆசிரியை மல்லிகா.

"ராதா! கூரையிலே என்ன பார்க்கிறாய்? "அம்மா"வைப் பற்றி கட்டுரை எழுது என்றேனே!..."

"அம்மா!"—ஏதோ யோசித்தான் ராதா. எழுத ஆரம்பித்தான்.

அந்த விசித்திரத் தம்பி என்னதான் எழுதுகிறான் என்று அறிய விரும்பினார் ஆசிரியை. அவனருகில் சென்றார். எழுதுவதைப் பார்த்தார். அதற்குள் கட்டுரையை எழுதியே முடித்து விட்டான் அவன். ஆசிரியை அதைப் படித்தார். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. அவரது முகத்திலே பல கேள்விக் குறிகள் தோன்றி மறைந்தன. ராதாவின் முகத்தைப்பார்த்தார். அப்படிப் பார்க்க வேண்டும் போலிருந்தது—இல்லை, தூண்டியது உள்ளத்திலே எழுந்து நின்ற வினா! ஆனால் அவன் முகத்திலே—கண்களிலே அதே ஏக்கம்!

'என்ன, பிள்ளையப்பா இது!' என்று முணுமுணுத்தார் அவர். ஆனால் இப்போது தொனியிலே வெறுப்பு இல்லை; வியப்புதான் தென்பட்டது!

"ராதா! இதுதான் அம்மாவைப் பற்றி கட்டுரையா?"

அவன் 'சடக்'கென்று எழுந்து நின்றான். "ஆமாம் டீச்சர்! படிக்கிறேன். அம்மாவுக்கு ஐந்து பிள்ளைகள் உண்டு: அவை எல்லாம் அழகானவையே. ஐந்துக்கும் பால் கொடுப்பாள்; உடம்பெல்லாம் நக்கிக் கொடுப்பாள்; பாய்வதற்கு கற்றுக் கொடுப்பாள்! அவள் ரொம்ப ரொம்ப நல்ல அம்மா!"—அவ்வளவுதான் கட்டுரை!

அவன் படிப்பதைக் கேட்ட மற்ற மாணவர்கள் கைபாண்டி செய்தார்கள்; கேலியாகச் சிரித்தார்கள். ஆனால் ராதாவோ, தான் கண்டு பிடித்து விட்ட மாபெரும் உண்மையை மனதிற்குள்ளேயே மூடி வைக்க முடியாமல், உலகறிய எடுத்துச் சொல்லுபவனைப்போல், உரத்த குரலால் மீண்டுமொரு முறை அந்தக் 'கட்டுரை'யைப் படித்தான். உணர்ச்சிப் பெருக்கால் கூச்சலிடுவது போல இருந்தது அவன் கத்தியது.

ஆசிரியையின் மனதிலே ஒரே புதிர் சூழ்ந்தது. "ராதா! உன் கட்டுரையைக் குப்பையில் போடு! தாமதமாகப் பள்ளிக்கு வருவதின் அழகு இதுதான். பள்ளி முடிந்ததும் ஆசிரியர்கள் அறைக்குவா!" என்றார்.

ராதா பேசாமல் இருந்தான். "கட்டுரை யாசிரியருக்கு சரியான பூசை இருக்குடோய்" என்று மூலையிலிருந்து எழும்பிய குரல் கூட அவன் காதுகளில் விழுந்ததாகவே தெரியவில்லை.

★

ஆசிரியர் அறையில் கிடந்த ஒரு ஆங்கில மாத இதழை, ஏதோ ரொம்பவும் தெரிந்தவன் போல் திருப்பித் திருப்பிப் புரட்டிக் கொண்டிருந்தான் ராதா.

"ராதா! நீ ஏன் தினம் தினம் தாமதமாக வருகிறாய்?"—மல்லிகா கேட்டார்.

"காரணம் என்ன? எனக்கே தெரியவில்லையே டீச்சர்! நான் என்னவோ ஒரு மணி முன்னதாகவே புறப்பட்டு விடுகிறேனே!"—பெரிய மனிதரைப்போல் ஆச்சரியப் பார்வையுடன் பேசினான் ராதா.

"வெட்கமாயில்லை உனக்கு; ஏன் பொய்பேசுகிறாய்? அரை மணிக்குள் உன் வீட்டிலிருந்து இங்கு வந்துவிடலாமே! சரி... சரி...நான் உன் அம்மாவிடம் உன்னைப்பற்றி புகார் செய்யப் போகிறேன்!"

"எனக்கு அம்மாவும் அப்பாவும் இல்லையே, டீச்சர்!"

'சுருக்'கென்றது மல்லிகாவுக்கு. "ஏன் ராதா, பின நீ யாரிடம் இருக்கிறாய்?" என்றார் துடிப்புடன்.

"என்னை 'குரங்கே, கோட்டானே'ன்னு கூப்பிடுவாரே, அவரு வீட்டில்தான் இருக்கேன்!"

மல்லிகா அவசர அவசரமாகப் புறப்பட்டார். "அவரிடமாவது நான் சொல்லத்தான் வேண்டும்...உம்... கிளம்பு!" என்றார்.

ராதா புத்தகப் பையை கையிலே தொங்கவிட்டுக்கொண்டு முன்னால் நடந்தான். சற்று தூரம் நடந்ததும் பாதையை விட்டு இறங்கி, சாலையோரத் தோப்பை நோக்கி நடக்க ஆரம்பித்தான். மல்லிகா திடுக்கிட்டார். அந்த இடத்தை கிராமத்தார் 'பெரிய தோப்பு' என்பார்கள். ஆனால் அது ஒரு பெரும் காட்டைப் போலவே இருக்கும்.

"ராதா! ராதா!...வழியை விட்டு அங்கே ஏன் போகிறாய்?" என்று பதட்டத்துடன் கேட்டார் மல்லிகா.

"தெரியாதா டீச்சர், இதுதான் குறுக்குவழி! நான் தினம் இப்படித் தான் வருவேன்; போவேன். வாங்க, சீக்கிரமா போய்விடலாம்!" என்றான் ராதா, திரும்பிப் பார்த்து.

அடர்ந்த மரங்களுக்கிடையே—தாழ்ந்திருந்த கிளைகளுக்கு தலை குனிந்து—சருகுகள் 'சலசல' என்ற சப்தம் எழும்ப அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள். மல்லிகாவுக்கு பயம்தான்—இருந்தாலும் பொறுமையும் பூசலும் இல்லாத அமைதியான ஒரு 'மாய' உலகத்தில் புகுந்துவிட்டதாக உணர்ந்தார்.

குறுக்கிட்ட அருவி ஒன்றைக் கடந்து, முட்செடிகள் நிரம்பிய புதரையும் தாண்டி, ஒரு பிரமாண்டமான ஆலமரத்தைப் பார்த்தார்கள்.

மல்லிகா பிரமித்துவிட்டார். சற்று நேரம்அசந்துபோய்நின்றும்விட்டார். அப்போது "டீச்சர், டீச்சர்! இதோ பாருங்கள்! இங்கே என்ன இருக்கிறது என்று பாருங்களேன்!" என்ற ராதாவின் உரத்த குரல் எழும்பியது.

ராதா ஆலமரத்து அடியில் எதையோ குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான். மல்லிகா ஓடினார். அங்கே ஒரு அழகான முயல்—அதைச் சுற்றி அழகழகான முயல் குட்டிகள்; எண்ணிக்கையில் ஐந்து குட்டிகள் தாயிடம் பால் குடித்துக் கொண்டிருந்தன. அவைகள் ராதாவைக் கண்டு ஓட வில்லை. நீண்ட நாட்கள் நெருங்கிப் பழகியவைகளைப் போல இருந்தன. அப்பப்பா! தாய் முயல் தனது தங்கக் குழந்தைகளை நாக்கினால் தடவிக் கொடுக்கும் பரிவுதான் என்ன!

"அம்மாவுக்கு ஐந்து பிள்ளைகள் உண்டு. எல்லாம் அழகானவை. அம்மா ஐந்துக்கும் பால் கொடுப்பாள்; உடம்பெல்லாம் நக்கிக் கொடுப்பாள்; பாய்வதற்குக் கற்றுக் கொடுப்பாள்; அவள் ரொம்ப ரொம்ப நல்லவள்!"

திடீரென்று ராதா எழுதிய கட்டுரையின் ஞாபகம் வந்துவிட்டது மல்லிகாவுக்கு. அந்தச் சிறுவனின் எழுத்துக்களில் மறைந்து கிடக்கும் உண்மை...? ராதாவைப்பார்த்தார். அந்த சூதற்ற முகத்திலே குழப்பம்—ஏக்கம்! பார்வையிலே பாவம்—பரிதாபம்! கண்களிலே ததும்பி நின்றது கண்ணீர்! அவன் எதற்காக ஏங்குகிறான்? ஏங்கித் தவிக்கிறான்? பார்வை முயல் கூட்டத்திலே-அவைகளின் விளையாட்டிலே குத்திட்டு நிற்க சிலையானார் மல்லிகா.

நேரம் போய்க்கொண்டே இருந்தது. ரொம்ப நேரம் ஆகிவிட்டது. ஆசிரியை திடுக்கிட்டு உணர்வு பெற்றபோதுதான் நன்றாக இருள் சூழ்ந்து வருவதை உணர்ந்தார். தான ஏமாற்றப்பட்டுவிட்டதைப் போன்ற நினைவை அடைந்தார். அதேசமயம், திடீரென்று "ஐயோ, ஐயோ!" என்ற அலறல் சப்தம் எழுந்தது. மல்லிகா திடுக்கிட்டார். ஆலமரத்திற்கு கொஞ்ச தூரத்திலே ராதா அழுதபடி நின்றுகொண்டிருந்

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

MURASOLI விலை 0-2-0

கடைசிப் பக்கம்

'எழுத்தாணி'

ஜி. சுப்ரமணியம்; புதுவை.

(?) ஓய்! எழுத்தாணியாரே! சொல்லைப் விற்பவன் ஒரு தமிழனாக இருந்தால்...?

'ஐயோ வீபீடணா! உன் குணத்தை மிச்சம் விட்டுப் போனாயோ?' என்று வருந்துவதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்!

ரே. வேங்கடாசலம்; இராமநாதபுரம்.

(?) ஏணியின் இறுதிப் படி எதை நினைவூட்டுகிறது?

"ஏ! மனிதா; எப்படி உயர்ந்தாய் நீ? இந்த இறுதிப் படியில் நிற்கும்போதாவது எண்ணிப் பார்!" என்று நினைப்பூட்டுவதாகவும் இருக்கலாம்!

சுப. முத்தையா; காரைக்குடி.

(?) கொள்கையும்,பணமும் போராடும்போது, முடிவாக வெற்றி பெறுவது எது?

கொள்கைதான் — லட்சியவாதிகளுக்கு மட்டும்!

கமலநாதன்; திருத்துறைப்பூண்டி.

(?) நாடாள்வதற்கும், நாடகமாடுவதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

யார் வேண்டுமானாலும் நடிகராகி விட முடியாது! அதற்கு-அழகு, அறிவு, ஆற்றல் மூன்றும் தேவை!

ஆனால், யார் வேண்டுமானாலும் நாடாள வந்துவிடலாம்; அதற்கு காமராசர் ஒருவரையே சான்றாக்கி விடலாமே!

ப. வடமலை; செங்குன்றம்.

(?) தி.மு.க.வின் கோஷத்திற்காக பாரதத்தை துண்டாட முடியுமா என்று ஒரு 'சனம்' பேசியிருக்கிறாரே, அதுபற்றி உங்கள் கருத்தென்ன?

"பாகிஸ்தானுக்காக இந்தியாவை 'ஆபரேஷன்' செய்ய முடியுமா?" என்றுதான் 1944வரை வேவல் துரை பேசிக்கொண்டிருந்தார் என்பதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

டி. ஐயாக்கண்ணு; மதுரை.

(?) அண்மையில் ஜீவானந்தம் ஒரு கூட்டத்தில் பேசும்போது, 'திராவிடம்' என்ற சொல் தமிழ் அல்ல; அதை எப்படி ஒப்புக் கொள்வது என்றாரே?

தோழரே! 'ஜீவானந்தம்' என்ற பெயரே தமிழ்ப் பெயர் அல்ல; என்றாலும் அவரையும் நாம் தமிழரென்றே ஒப்புக்கொள்ளுகிறோம்!

கருணாநிதி நிகழ்ச்சிகள்.

★

ஜூன் 17 காலை—திருப்பத்தூர் (வ. ஆ.)

,, மாலை—சென்னை —நாடகத் தலைமை

21 காலை—அறந்தாங்கி — திருமணம்

,, மாலை—திருவாரூர் —பொதுக்கூட்டம்

24 குளித்தலை கூட்டம்

திருவாரூரில்

தி. மு. கழகக் கூட்டம்

21—6—56 மாலை 6 மணிக்கு

அம்பில் தர்மலிங்கம்

தலைமையில்

மு. கருணாநிதி,

டாக்டர்-சத்தியவாணி முத்து,

பராங்குசம், எஸ். எஸ். மணி, முல்லை சத்தி

ஆகியோர் பேசுவர்.

கலை உலகில்...

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

நண்பர் கருணாநிதியுமாவார்கள். அண்ணா எழுதிய சரித்திர நாடகம் 'சந்திரமோகன்'. தோரணா,புரந்தர், ராசகிரி, கல்யாண் என்ற மகத்தான கற்கோட்டைகளை, மராட்டிய மாவீரன் சிவாஜி இடித்துத் தள்ளியிருந்தாலும், காகபட்டனால் காப்பாற்றப்பட்ட ஆரிய இனக் கோட்டையை அசைக்கவே முடியவில்லை. 'ஆரியத்தால் அழிந்துவரும் சமூகமே, எச்சரிக்கை' என்று நம்மைத் தட்டி எழுப்பியதைப் போன்றிருந்தது. படத்திற்கு அவர் எழுதிய புரட்சிக் கதை 'வேலைக்காரி'. திமிரெனும் மலையுச்சியிலே இருந்துகொண்டு பணப் பயிர் செய்ய, சுந்தரம் பிள்ளையின் உடலையும் உயிரையும் உரமாக்கி, ஏழைகளின் கண்ணீரை கனகமாக்கி, சாதியென்னும் சட்டையால் உடலை மூடிக்கொண்டிருந்த விவேகமில்லா வேதாசலத்தை மலையடிவாரத்தில் உருட்டி, சாதிபேதமற்ற சமுதாய உணர்வையுண்டாக்கி, பணம் படைத்தோரை பழிதீர்த்துக் கொண்டது. எவ்வளவு கிளர்ச்சிகள் வெளியே! அவருடைய ஈடிணையற்ற எழுதுகோலில் வேதாசலம் மாத்திரம் அகப்படவில்லை. காளியே அகப்பட்டாள்! காளியும் பொய். அவள் கண் திறந்திருப்பதாக சித்தரிக்கப் பட்டிருப்பதும் பொய், ஏழைக்கு இரங்குவாள் என்பதெல்லாம்பொய். தாயுள்ளம் கொண்ட கருணைத் தாய் என்பதெல்லாம் கயவர்கள் செய்த கற்பனை, ஆகவே அவள் முன்னால் படைக்கப்பட்டிருந்த அவ்வளவும் தூள்! தூள்! காளியை ஒரு பெரும் புயலே சூழ்ந்துகொண்டது. பக்தர்கள் மனதின் அச்சுவேர் — ஆணிவேர் — சல்லிவேர் அடங்க எல்லாம் ஆட்டம் கண்டுவிட்டது.

அடுத்து நண்பர் கருணாநிதி அவர்கள் எழுதிய சிறந்த நாடகம் 'மணிமகுடம்'. அது இன்றைய அரசியல் உலகில் பலருடைய சிந்தையைக் கிளறியிருக்கிறது. தீவிரத்திற்கும், அதிதீவிரத்திற்கும் அரசியலில் ஏற்படும் மோதுதலுக்கு ஒரு முடிவு காணும் வகையில் அமைந்திருக்கிறது 'மணிமகுடம்'. மணியாலும் பொன்னாலும் செய்யப்பட்ட மணிமகுடங்கள் மண்ணில் உருண்டபிறகு, இந்த மணிமகுடம் நாட்டின் முன்னேற்றத்தில் கவலை கொண்ட பல்லோருடைய சிந்தையெனும் சென்னியில் அணிவிக்கப் படுகிறது. நாடகம் பார்த்தபிறகு அதைப் பற்றிய விமர்சனங்கள் நாட்டின் நாலுபக்கங்களிலும் பேசப்படுவதொன்றே மணிமகுடத்தின் வெற்றிக்குக் எடுத்துக் காட்டு!

அடுத்து நண்பர் கருணாநிதி எழுதிய திரைப்படம் பராசக்தி. அவர் வன்மை மிக்க பேனாவிலும் அகப்பட்டாள் காளி. ஆயிரம் கண்ணுடையாளே என்று அர்ச்சிக்கிறார்களே பக்தர்கள்; அந்த ஆயிரம் கண்களில் ஒரு கண்ணில் கூடவா படவில்லை உன் பூசாரி செய்யும் அக்கிரமம்! இருண்ட கண்ணுடையாளே! இடம் விட்டுப் பெயராத கற்சிலையே! காமுகன் ஒருவனை உன் சன்னிதானத்திலே வைத்திருக்கிறாய். கொல்ல விடு. எடு கோடரியை – என்று தூக்கி அந்தக் கொடியோனை வீழ்த்தினார். அக்ரகாரத்தில் கிளம்பியது கூச்சல். பரப்பிரம்மம் என்ற ஒரு தாக்குதலையே அனுப்பி வைத்தது 'தினமணி' ஏடு'நாமும்தாக்கினோம்; தர்ப்பாசூரர்களைப் பிடித்திருந்த பொறாமை நோய் போகும் வரையில் தாக்கினோம். அடங்கிற்று ஒருவாறு. 'காலம் இப்படி ஆகி விட்டதா?' என்றனர். 'இல்லை கண்யவான்களே, இல்லை! கலையிலே கருத்துப்புரட்சி'-என்றோம்! துடித்தனர். துரைத்தனத்தாரின் துணை நாடினர். தேம்பி யழுதனர். வாடா முகங்களைக் கண்டு வாடிப்போன ஆட்சி கத்தரிக் கோலைக் கையில் எடுத்தது. அண்ணா எழுதியதா? ஆயிரம் இரண்டாயிரம் அடிகள், அருமையான கட்டங்கள். அவ்வளவும் மறைந்தது. அன்பர் கருணாநிதி எழுதியதா?ஆயிரம் இரண்டாயிரம் அடிகள் மாத்திரமல்ல, அதற்கு மேலும் உண்டு. கதையின் கண்ணையே வெட்டு! கால்களை முறி! கருத்துக்களை குழப்பி குப்பை மேடாக்கு! கதையின் பாதையைத் துண்டித்து விடு!

பராசக்தி படம் வெளியான நாள் முதல் சிங்களத் தீவிலே நம் கழகத்திற்கு தி. மு. கழகம் என்றுகூட பெயரில்லை; பராசக்தி கட்சி என்றே வாழ்த்தொலி வழங்குகின்றனர். 'பராசக்தி பட்சே ஜெயவேவா! (பராசக்தி கட்சி வாழ்க) என்றல்லவா முரசறைகின்றனர் — என்று சீறி எழுந்தது சிங்காதனம். கருணாநிதி கலையில் செய்த கருத்துப் புரட்சி கடல் கடந்து சிங்களம் சென்று யாழ்ப்பாணம் முதல் திரிகோணமலை வரையில், ரத்தினபுரி முதல் பண்டாரவளை, பதுளா முதல் உள்ள எல்லா மலைகளிலேயும் எதிரொலி எழுப்பிற்று. கண்டி கோட்டை, கதிர்காமம் முருகன் கோட்டம் எல்லாம் கலங்கிற்று! ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆயிரமாயிரம் புராணக் கதைகள் நிபந்தனையற்ற சரணாகதி யடைந்தது நமது அண்ணா, கருணாநிதி முன்னால்.

ஆனால் அதே காளி ஒரு சில மதவாதிகளிடம் அகப்பட்டுக் கொண்டு பாட வரம் தருகிறாள். பரிதாபத்துக்குரியவர்கள் —மனம் விரிந்தோரால் மன்னிக்கப் படுகிறார்கள். பாவத்தைப் போக்க முடியாத காளி, பக்கத்திலே நிற்கும் பக்தனுடைய பாதகச் செயலைக் கண்டிக்க முடியாத காளி பாட வரம் அளித்தாள் என்று சித்தரிக்கப்படுகிறாள், சில எதுவும் தெரியாத ஏமாளிகளால். காலம் தன் கடமையைச் செய்தே தீரும். உண்மை அடையாளங்கள் தெரியாமலே போவதுண்டு. உதாரணம் வேண்டுமானால் ஒரு மரத்தை எடுத்துக் கொள்ளுவோம் மரம் இலையுதிர் காலத்தில் பார்த்தால் மொட்டையாக இருக்கும். அப்போது அந்த மரத்தின் மேல் என்னென்ன உட்கார்ந்து கொண்டிருக்கின்றன என்று எளிதில் கண்டு கொள்ளலாம் ஆனால் அதே மரம் அடர்ந்து,எங்கு பார்த்தாலும் இலைகளும், கிளைகளுமாக மறைத்து கொண்டிருக்கும் போது, மேலே என்னென்ன உட்கார்ந்துகொண்டிருக்கின்றன என்பது தெரியாது. அது அது தன் சொந்தக் குரலை எழுப்பும்போது தான் ஓகோ;குயிலும் இருக்கிறது, அதன் பக்கத்தில் ஒரு கோட்டானும் இருக்கிறதா-என்று தெரிந்து கொள்ள முடியும்.

இதுபோலவே புராண பித்தர்கள் சிலர் கலைஉலகில் எப்படியோ கலந்துவிடுகிறார்கள். சாகரத்தில் புயலும், சந்திரனில் களங்கமும், சேர்ந்திருப்பது இயற்கை.

சந்திரனைச் சூழ்ந்திருக்கும் மேகங்கள் ஒதுங்க முடியாதவை என்று ஒண்ணும் நம்பர் பைத்தியக்காரனும் சொல்ல மாட்டான். ஆகவே கலையில் நாம் ஒரு பக்கம் கருத்துப் புரட்சி செய்து கொண்டிருக்கும் இதே நேரத்தில், கலையைக் கொலை செய்து, அந்த நாற்றமெடுத்த பிணத்தை கஜானாவில் மூடி வைக்கும் கொடுமையை நாம் எதிர்த்து சமாளிப்போம்-இது உறுதி என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

★

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128,மவுண்ட் ரோடு,சென்னை-6